பக்கங்கள் : 16
viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 137 வள்ளுவர் ஆண்டு 2054 சித்திரை 22 வெள்ளிக்கிழமை (05.05.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829


சர்வதேச திருமண சேவை
T.P. 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=
மட்டுமே

## தையிட்டி விகாரைக்கு
## நீதவான் நேரடி விஜயம்



15

## தையிட்டியில் 5 பேர் கைதாகி விடுதலை

(யாழ்ப்பாணம்)

தையிட்டி விகாரைக்கு அருகில் பலாலி பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட பெண் உள்ளிட்ட ஐவரை பிணையில் செல்ல மல்லாகம் நீதவான் நீதிமன்று அனுமதித் 15

## அமைதியாகப் போராடலாம்
### மல்லாகம் நீதிமன்றம்

(யாழ்ப்பாணம்)

தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு அண்மையில் உள்ள காணியில் இருந்து அமைதியான முறையில் போராட்டத்தில் ஈடுபடலாம் என மல்லாகம் நீதிமன்றம் அறிவித்துள்ளது.

குறித்த விகாரைக்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்றுமுன்தினம் தையிட்டி விகாரைக்கு அண்மையில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது இராணுவம் மற்றும் பொலிஸாரால் வீதி மறியல் போடப்பட்டது. ஆகையால் வெளியே உள்ளவர்கள் உள்ளே போகமுடியாது, உள்ளே உள்ள 15

## பௌத்த ஆக்கிரமிப்புக்கு எதிராக
# தையிட்டியில் இன்று அணிதிரளுங்கள்
## தமிழ்த் தேசிய உணர்வாளர்களுக்கு அழைப்பு


(யாழ்ப்பாணம்)

பௌத்த பேரினவாத ஆக்கிரமிப்புகளுக்கு எதிராக தையிட்டியில் இடம்பெறும் இன்றைய போராட்டத்தில் கலந்து கொள்ளுமாறு தமிழ்த் தேசிய உணர்வாளர்களுக்கு வலி.வடக்கு தமிழ்த் தேசிய பேரவை அழைப்பு விடுத்துள்ளது.

இது தொடர்பில் தமிழ்த் தேசிய பேரவை அனுப்பிவைத்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தையிட்டியில் தனியார் காணிகளை சட்டவிரோதமாக ஆக்கிரமித்து சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரைக் கட்டுமானத்திற்கு எதிராகவும், தனியாருடைய காணிகளை உரியவர்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்று வலியுறுத்தியும் புதன்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு ஆரம்பிக்கப்பட்ட கவனயீர்ப்புப் போராட்டம் இரவு பகலாக தொடர்ந்து இடம்பெற்று வரு 15

## தையிட்டி விகாரையின்
## வழிபாட்டுக்கோ, உற்சவத்துக்கோ இடையூறு விளைவிக்கக்கூடாது
### மல்லாகம் நீதிமன்று கட்டளை



(யாழ்ப்பாணம்)

தையிட்டி விகாரை வழிபாட்டுக்கோ, விகாரையில் இடம்பெறும் உற்சவத்துக்கோ எந்தவித இடையூறும் ஏற்படுத்தக்கூடாது என மல்லாகம் நீதிமன்று கட்டளையாக்கியுள்ளது.

பலாலி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, பாராளுமன்ற 15

## யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்தை புறக்கணித்து
## தையிட்டி போராட்டக்களம் சென்ற தமிழ் எம்.பிக்கள்



15

க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான
மேல் மாகாண கல்வித் திணைக்களத்தின்
பரீட்சை வினாத்தாள்
உள்ளே

## இலங்கையில் புதிதாக 1,125 தூபிகள்
### எதிர்க்கட்சித் தலைவர் சஜித்



(கொழும்பு)

இலங்கையில் சசுனட அருண வேலைத்திட்டத்தின் கீழ் 1,125 தூபிகள் நிர்மாணிக்கப்படவுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

இந்த வேலைத்திட்டத்தின் கீழ் 12ஆவது தூபி ஆன மடுவ துமிந்தராம விகாரைக்கு கையளிக்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற் 02

## பண்ணை நாகபூஷண அம்மன் வ க்கு
### 16ஆம் திகதிவ ர ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பண்ணை சுற்றுவட்டத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள நாகபூஷணி அம்மன் 15

## வங்காளவிரிகுடாவில் காற்றழுத்த தாழமுக்கம்
### மீனவர்களுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

தென்கிழக்கு வங்காள விரிகுடாவில் காற்றழுத்த தாழமுக்கம் மே 06 ஆம் திகதி முதல் உருவாக வாய்ப்பு உள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் வரும் அறிவிப்புகள் 02

## தையிட்டி விகாரை தொடர்பில் ஆராய்கின்றோம்
## வடக்கிலுள்ளவர்கள் தெற்கில் இந்து ஆலயம் அமைப்பதற்கு தடையில்லை
### புத்தசாசன அமைச்சர் விதுர



(கொழும்பு)

தையிட்டியில் அமைக்கப்பட்டுள்ள விகாரை தொடர்பில் ஆராய்ந்து வருவதாக தெரிவித்துள்ள புத்தசாசன அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க வடக்கிலுள்ளவர்கள் தெற்கில் இந்து ஆலயம் 02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# தையிட்டியில் அத்துமீறல்கள் இடம்பெற்றிருந்தால் ஏற்க முடியாது



## குறித்த விடயம் ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு செல்லப்படும் அமைச்சர் டக்ளஸ்

(யாழ்ப்பாணம்)

தையிட்டி விகாரை விவகாரம் தொடர்பான ஆவணங்களை ஆராயவுள்ளதுடன் அதனை ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு செல்ல இருப்பதாகவும் தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அத்துமீறல்கள் இடம்பெற்றிருக்குமாயின் அவற்றை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் தெரிவித்தார்.

நேற்று இடம்பெற்ற யாழ் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தினை தொடர்ந்து ஊடக வியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே கடற்றொழில் அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கடந்த காலங்களில் இராணுவத்தினர் நிலைகொண்டிருந்த பகுதிகளில் சிறிய விகாரைகள் அமைக்கப்பட்டிருந்ததும் பின்னர் அந்தப் பகுதிகள் மக்களிடம் கையளிக்கப்பட்ட போது அவை அகற்றப்பட்டிருப்பதையும் சில இடங்களில் காணக்கூடியதாக இருக்கின்றது.

இவ்வாறான நிலையிலேயே, தையிட்டி விகாரை தொடர்பாக சில தரப்புக்களினால் தற்போது பேசப்படுகிறது.

இதற்கான அடிக்கல் 2018 ஆம் ஆண்டு அப்போதைய வடக்கு மாகாண ஆளுநரினால் நாட்டப்பட்டிருக்கிறது.

விகாரை அமைக்கப்பட்டுள்ள காணி தொடர்பான விபரங்களை சம்பந்தப்பட்ட பிரதேச செயலாளரிடம் கோரியிருக்கின்றேன். அவற்றை ஆராய்வதுடன், விரைவில் ஜனாதிபதிக்கு வடக்கு மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் நடைபெறவுள்ள சந்திப்பிலும் பிரஸ்தாபிக்க எதிர்பார்க்கின்றேன்.

வெடுக்குநாறி விவகாரத்தினை சுமூகமான முறையில் தீர்த்து வைத்தது போன்று இந்த விடயங்களும் ஜனாதிபதி சரியான முறையில் தீர்த்து வைப்பார்." என்று தெரிவித்தார்.

(ம-7,9,33)

## அங்கஜன் எம்.பி கொடுத்த நீராகாரம் தூக்கி வீசப்பட்டது



(யாழ்ப்பாணம்)

பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தையிட்டி போராட்டக்களத்தில் நிற்பவர்களுக்கு என வழங்கிய நீராகாரத்தை தூக்கி வீசி அநாகரிகமாக நடந்து கொண்டமை அங்கிருந்தவர்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தி இருந்தது.

தையிட்டி விகாரையை அகற்றக் கோரிநேற்று முன்தினம் புதன்கிழமை முதல் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், விகாரைக்கு எதிர்ப்பு தெரிவித்து, நேற்றைய தினம் யாழ்.மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் இருந்து வெளிநடப்பு செய்த பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் போராட்டம் இடம்பெறும் இடத்திற்கு நேரில் சென்று, தனது ஆதரவை தெரிவித்ததுடன், அங்கிருந்தவர்களுக்கு சோடா , பால் பக்கெட் போன்ற நீராகாரங்களையும் பிஸ்கெட் வகைகளையும் வழங்கினார்.

போராட்டக் களத்தில் இருந்து அங்கஜன் வெளியேறியதும், அவர்கள் கொடுத்தவை அருகில் உள்ள வேலி ஓரம் வீசப்பட்டு இருந்தது.

அதனை அவதானித்த அங்கிருந்தவர்கள், நாட்டில் பொருளாதார நெருக்கடிகள் காணப்படும் நிலையில் , எவ்வளவோ பேர் உணவுக்காக ஏங்கி நிற்கும் நிலைமை காணப்படுகின்ற இந்த கால பகுதியில் உணவுப் பொருட்களை வீசி எறிந்து அநாகரிகமாக செயற்பட்டவர்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு குரல் கொடுக்க எந்த அருகதையும் அற்றவர்கள் என விசனம் தெரிவித்தனர்.

(ம-7,9,33)

### இலங்கையில்...

றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது, "இன்று எமது நாடு பொருளாதார ரீதியாக வங்குரோத்தடைந்து, மக்களின் வாழ்க்கை சீரழிந்துபோயுள்ளது.

ஜீவனோபாயத்தை நடத்த முடியாமல் மக்கள் ஆதரவற்ற நிலையில் உள்ளனர்.

இவ்வாறான நிலையில் சசுனட அருண வேலைத்திட்டத்தின் ஊடாக பௌத்த மத விகாரைகளை புனரமைக்கவும், கத்தோலிக்க தேவஸ்தானங்களுக்கு திருத்தம், மஸ்ஜிதுகளுக்குப் புதுப்பொழிவு, தர்மத்தின் ஒளி போன்ற நிகழ்ச்சிகளின் மூலம் ஏனைய மத வழிபாட்டுத் தலங்களைப் பாதுகாக்க எதிர்பார்த்துள்ளோம்.

பௌத்த விகாரைகள் போலவே ஏனைய மத வழிபாட்டுத் தலங்களுக்கு உரிய இடத்தை அரசாங்கம் வழங்காவிட்டாலும், எதிர்க்கட்சி இந்த அனைத்து மத ஸ்தலங்களிலும் கவனம் செலுத்தியுள்ளது.

நாட்டில் பௌத்த மதத்திற்கு மாத்திரமன்றி ஏனைய மதங்களுக்கும் சமமான இடம் வழங்கி சக மதங்களின் இருப்புக்கு பாதுகாப்பு வழங்கப்படும்" என்றார்.

(ம-7,9)

### வடக்கிலுள்ள...

அமைப்பதற்கு தடையில்லை என தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் - தையிட்டி பகுதியில் மக்களுக்கு சொந்தமான காணிகளில் பௌத்த விகாரை நிர்மாணிக்கப்பட்டுள்ளதாக கூறப்படும் குற்றச்சாட்டு தொடர்பில் புத்தசாசன, அமைச்சர் விதுர விக்கிரமநாயக்கவிடம் தொடர்பு கொண்டு கேட்ட போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தையிட்டி தொடர்பில் தான் ஆராய்ந்து வருவதாகவும், விரைவில் இது தொடர்பில் நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் பதிலளித்தார்.

எனினும், சமயமொன்றை பின்பற்றுவது அவரவர் உரிமை என குறிப்பிட்டார்.

வடக்கிலுள்ளவர்களுக்கு, தெற்கில் வருகை தந்து இந்து ஆலயங்களை நிர்மாணிப்பதற்கு தடையில்லை என குறிப்பிட்டார்.

"சமயத்தை பின்பற்றுவது அனைவரது உரிமை. வடக்கிலுள்ளவர்கள், தெற்கிற்கு வருகை தந்து ஆலயங்களை நிர்மாணிப்பதற்கு தடையில்லை.

அதற்கு நடைமுறையொன்று காணப்பட வேண்டும். அந்த நடைமுறையிலிருந்து வெளியேறினால் மாத்திரமே பிரச்சினை ஏற்படும். வெடுக்குநாறி பகுதியில் காணப்பட்ட பிரச்சினை முடிவுக்கு கொண்டு வரப்பட்டது.

கச்சதீவில் பிரதிஷ்டை செய்யப்பட்ட புத்தர் சிலை அகற்றப்பட்டது.

எனது தலைமையில் கிளிநொச்சியில் இரண்டு ஆலயங்களை நாம் நிர்மாணிக்கின்றோம். அது தொடர்பில் யாரும் பேசுவதில்லை.

இது அனைத்தும் எமக்கு சொந்தமானவை. நான் பொதுவாக இருந்து, பக்கச்சார்பின்றி செயற்பட்டு, பிரச்சினையை முடிவுக்கு கொண்டு வருவேன் என அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தெரிவித்தார்.

(ம-7,9,33)

### வங்காள...

தொடர்பில் அவதானம் செலுத்துமாறு மீனவ மற்றும் கடற்படை சமூகத்தை வளிமண்டலவியல் திணைக்களம் வலியுறுத்தியுள்ளது.

நாட்டைச் சுற்றியுள்ள கடற்கரைகளில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும்.

நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் தென் திசையிலிருந்து காற்று வீசுவதுடன் காற்றின் வேகமும் அதிகரிக்கும் கி. மீ. (20-30) பேருவளையிலிருந்து காலி மற்றும் அம்பாந்தோட்டை ஊடாக மாத்தறை வரையான கரையோரப் பகுதிகளில் காற்றின் வேகம் கி. மீ. (40-45) வரை அதிகரிக்கலாம்.

பேருவளையில் இருந்து காலி மற்றும் மாத்தறை முதல் அம்பாந்தோட்டை, வரையான கடற்பரப்புகள் சில சமயங்களில் சற்று கொந்தளிப்பாக இருக்கும்.

தீவைச் சுற்றியுள்ள ஏனைய கடற்பரப்புகள் சாதாரணமாகவோ அல்லது சற்று கொந்தளிப்பாகவோ இருக்கும்.

இடியுடன் கூடிய மழை பெய்யும் போது, அந்த கடல்களில் தற்காலிகமாக பலத்த காற்று வீசக்கூடும், கடல்கள் தற்காலிகமாக மிகவும் கொந்தளிப்பாக காணப்படும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

(ம-7,9)


## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் புத்தூரில் 12 பரப்பு காணி விற்பனைக்குண்டு (நிலப்பரப்பு)**

- யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியிலிருந்து (காப்பெற் வீதி ) 100m தூரத்தில்.
- 15 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி
- நன்னீரூற்று நிலம்
- ஒரு பரப்பின் விலை (120,000/-) ஒரு இலட்சத்து இருபதாயிரம் ரூபாய் மட்டும்
- விவசாயம் செய்வதற்கும் வீடு கட்டுவதற்கும் உகந்த இடம்
- பருத்தித்துறை வீதியிலிருந்து 1 Km தூரம்
- சோமஸ்கந்தா கல்லூரியிலிருந்து 1 Km

(15468)

**பார்வையிடும் நேரம் : காலை 6 மணியிலிருந்து மாலை 6 மணி வரை**

**076 755 8606 ,077 638 5683**


## கத்தியைக் காண்பித்து பொலிஸாருக்கு அச்சுறுத்தல் இருவர் பொலிஸில் சரண்

கோப்பாய் பொலிஸாருக்கு வீதியில் வைத்து கிறீஸ் கத்தியைக் காண்பித்த இருவர் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்த நிலையில் நீதிமன்ற உத்தரவில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

உரும்பிராய் சந்தியில் கடந்த வாரம் வீதிப் போக்குவரத்து ஒழுங்கு பணியில் ஈடுபட்டிருந்த கோப்பாய் பொலிஸார், மோட்டார் சைக்கிளில் வந்த இருவரை மறித்து சோதனையிட முற்பட்டனர்.

அதன்போது பொலிஸாருக்கு கிறீஸ் கத்தியைக் காண்பித்த அவர்கள் மோட்டார் சைக்கிள், தேசிய அடையாள அட்டை என்பவற்றைக் கைவிட்டு தப்பி ஓடியுள்ளனர்.

அவற்றை மீட்ட பொலிஸார் நீதிமன்றில் சமர்ப்பிப்பதற்காக கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் வைத்திருந்தனர் இந் நிலையில், அவர்கள் இருவரும் நேற்று முன்தினம் தமது சட்டத்தரணி ஊடாக கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தனர்.

அவர்கள் இருவரும் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.

சந்தேக நபர்கள் இருவர் சார்பிலும் பிணை விண்ணப்பம் முன்வைக்கப்பட்ட போதும் அதனை நிராகரித்த மன்று இருவரையும் வரும் 17ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையை மீட்டெடுக்க முடியும்

# சர்வதேச நாணய நிதியம் நம்பிக்கை

(கொழும்பு)

**இலங்கையை செழிப்பான பாதையில் மீண்டும் கொண்டுசெல்ல முடியும் என சர்வதேச நாணய நிதியம் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.**



ஆசியா பசுபிக்கின் பொருளாதார நிலை குறித்து செய்தியாளர் மாநாட்டில் கருத்து தெரிவிக்கையில் சர்வதேச நாணய நிதியத்தின் ஆசிய பசுபிக்கிற்கான இயக்குநர் கிருஸ்ணா ஸ்ரீனிவாசன் இதனை தெரிவித்துள்ளார்.

இலங்கை ஒரு முக்கிய பிரச்சினை உள்ள நாடு இதற்கு கொவிட்டிற்கு முன்னர் அவர்கள் முன்னெடுத்த கொள்கைளில் உள்ள தவறுகளே இலங்கை பின்னிலையில் உள்ளமைக்கு காரணம்.

தனியார் கடன்வழங்குநர்கள் உத்தியோகபூர்வ கடன்வழங்குநர்களை உள்ளடக்கிய கடன்வழங்குநர்களுடன் கடன் இணக்கப்பாட்டிற்கு வருவதற்கான நல்லெண்ண முயற்சிகளை இலங்கை அடுத்த கட்டமாக மேற்கொள்ளவேண்டும்.

பொருளாதார வளர்ச்சியை பொறுத்தவரை 2022 இல் 8.7 வீத வீழ்ச்சி காணப்பட்டது 2023 இல் இது 3வீதமாக காணப்படும் சிறிய மீட்சி காணப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை சர்வதேச நாணயநிதியத்தின் திட்டத்தை சிறப்பாக நடைமுறைப்படுத்த வேண்டும் இதன் காரணமாக கடன்களை பேண்தகு தன்மை கொண்டமையாக மாற்றலாம்.

பணவீக்கத்தை இலங்கை குறைக்கவேண்டும் ஏன் என்றால் அது வறியவர்கள் மீது சுமையை செலுத்துகின்றது வறியவர்கள் நலிந்தவர்களை காயப்படுத்துகின்றது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

## உலக வங்கியின் 14 ஆவது தலைவரானார் இந்திய வம்சாவழியை சேர்ந்த அஜய்பங்கா

(வோஷிங்டன்)



உலக வங்கியின் ஆளுநர்கள் சபை புதிய தலைவரை தெரிவு செய்துள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

உலக வங்கியின் 14 ஆவது தலைவராக இந்திய வம்சாவழியைச் சேர்ந்த அஜய் பங்கா தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

பொருளாதார நிபுணர் மற்றும் ட்ரம்ப் அரசாங்கத்தில் பணியாற்றிய அமெரிக்க திறைசேரியின் அதிகாரியுமான இவர் ஜீன் 2 ஆம் திகதி தனது கடமைகளை பொறுப்பேற்கவுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன. (நி)

## 30 மில்லியன் பெறுமதியான அழகு சாதனப்பொருட்கள் மீட்பு

(கொழும்பு)

இறக்குமதியாள்ர் மற்றும் உற்பத்தி நிறுவனத்தின் பெயர் குறிப்பிடப்படாமல் வைக்கப்பட்டிருந்த அழகு சாதனப் பொருட்கள் உள்ளிட்ட பல உற்பத்திகளை நுகர்வோர் விவகார அதிகார சபையினர் கைப்பற்றியுள்ளனர்.

கொழும்பு - புறக்கோட்டை கதிரேசன் வீதியில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின் போதே இந்த உற்பத்தி பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைப்பற்றப்பட்ட அழகுசாதனப் பொருட்களின் பெறுமதி சுமார் 30 மில்லியன் ரூபா என நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட குறித்த உற்பத்திகள், வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டதாக கூறி சந்தையில் விற்பனை செய்வதற்கு தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்ததாக நுகர்வோர் விவகார அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.

கைப்பற்றப்பட்ட பொருட்களை இரசாயன பகுப்பாய்விற்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபை மேலும் தெரிவித்துள்ளது.(நி)

## பதில் நிதி அமைச்சராக ஷெஹான் சேமசிங்க

(கொழும்பு)

பதில் நிதி அமைச்சராக இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க பதவிப் பிரமாணம் செய்துகொண்டுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்றுக் காலை ஐக்கிய இராச்சியம் சென்றதை அடுத்து பதில் அமைச்சராக ஷெஹான் சேமசிங்க நியமிக்கப்பட்டுள்ளதாக நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

இலண்டனில் மூன்றாம் சார்ல்ஸ் மன்னரின் முடிசூட்டு விழாவில் பங்கேற்பதற்காக நிதியமைச்சராக இருக்கும் ஜனாதிபதி பிரிட்டன் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## தொழிலாளர்களின் நலன்களுக்கு முன்னுரிமையளித்து விரைவில் புதிய சட்டம் - மனுஷ நாணயக்கார

(கொழும்பு)



பல ஆண்டுகாலம் பழமை வாய்ந்த நாட்டின் தொழில் சட்டத்திற்குப் பதிலாக நவீன உலகத்திற்கு ஏற்றதும் தொழிலாளர்களின் நலன்களுக்கும் உரிமைகளுக்கும் முக்கியத்துவம் அளிக்கும் வகையில் புதிய தொழில் சட்டம் தயாரிக்கப்படவுள்ளதாக தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர்களுடனான சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அங்கு அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

தொழிலாளர்களின் உரிமைகளை பாதுகாப்பதுடன் அவர்களின் கௌரவத்தையும் பாதுகாத்து சர்வதேச தொழில் அமைப்பு ஏற்றுக்கொள்ளக் கூடிய புதிய தொழில் சட்டத்தை உருவாக்குவதுடன் தொழில் துறைகளில் ஈடுபட்டுள்ள பெண்களின் பாதுகாப்பு அவர்களின் உரிமை, விசேட தேவைகளை கொண்டுள்ளவர்களின் உரிமையை உறுதி செய்வதும் எமது நோக்கமாகும்.

மே தினத்தில் மாத்திரம் தொழிலாளர்களின் உரிமைக்காக குரல் எழுப்பாது அவர்களின் நீடித்த நலனை இலக்காகக் கொண்டு நாம் செயற்படுகின்றோம் என்றும் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார மேலும் தெரிவித்தார். (நி)

## ஆடை ஏற்றுமதியில் வீழ்ச்சி

(கொழும்பு)

இலங்கையின் ஆடை ஏற்றுமதி வருமானம் ஒரு பில்லியன் அமெரிக்க டொலரால் இந்த வருடம் வீழ்ச்சியடையக்கூடும் என இலங்கையின் உயர் மட்ட தொழில் நிபுணர் ஒருவரை மேற்கோள்காட்டி ரொய்டர்ஸ் செய்தி நிறுவனம் தகவல் வெளியிட்டுள்ளது.

கடந்த வருடம் ஆடை ஏற்றுமதி மூலம் 5.95 பில்லியன் டொலர் வருமானமாக ஈட்டப்பட்டுள்ளது.

எனினும், 2023ஆம் ஆண்டின் முதல் காலாண்டின் ஆடை தொழில்துறையின் செயற்திறன் மற்றும் ஆடை ஏற்றுமதிகள் 13.8 சதவீதம் குறைந்து 1.3 பில்லியன் அமெரிக்க டொலராக வீழ்ச்சியடைந்துள்ளதாக மத்திய வங்கியின் தரவுகள் தெரிவிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

## பசிலுக்கு பதவி இல்லை பொதுஜன பெரமுன அறிவிப்பு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் பசில் ராஜபக்ஷவுக்கு எந்தப் பதவியும் இல்லை என்று அக்கட்சியின் 'பொதுச் செயலாளர் சாகர காரியவசம் பரபரப்புத் தகவலை வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "மொட்டுக் கட்சியில் பசில் ராஜபக்ஷவுக்கு [illegible] பதவியும் இல்லை அவர் கட்சியின் ஸ்தாபகர் மட்டுமே.

அவரை மொட்டுவின் தேசிய அமைப்பாளர் என்ற ஊடகங்கள் கூறினாலும் அப்படியொரு பதவி அவருக்கு வழங்கப்படவில்லை. எமது கட்சி ஒருபோதும் உத்தியோக பூர்வமாக அவர் கட்சியின் தேசிய அமைப்பாளர் என்று அறிவித்ததில்லை.

அவரை நாங்கள் கட்சியின் ஸ்தாபகர் என்றே அறிமுகப்படுத்தி வருகின்றோம் என தெரிவித்துள்ளார். (நி)



### வெசாக் தினத்தை முன்னிட்டு

## சிறைக்கைதிகளை இன்றும் நாளையும் சந்திக்க வாய்ப்பு - சிறைச்சாலைகள் திணைக்களம்

(கொழும்பு)

வெசாக் போயா தினத்தை முன்னிட்டு சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளை உறவினர்கள் சந்திப்பதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இன்றும் நாளையும் இந்த வாய்ப்பு வழங்கப்படுவதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய, கைதிகளின் உறவினர்களின் மூலம் அவர்களின் வீடுகளில் இருந்து கொண்டு செல்லப்படும் உணவுப்பொதி மற்றும் இனிப்புப் பண்டங்களை ஒருவ[illegible]மான அளவில் வழங்க[illegible]மதி வழங்கப்பட்டுள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஷான் கிஷான் அதிரடி பஞ்சாப்பை வீழ்த்தியது மும்பை

ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரில் நேற்று முன்தினம் இரவு பஞ்சாப் கிங்ஸ், மும்பை இந்தியன்ஸ் அணிகள் இடையே போட்டி நடைபெற்றது.



டாஸ் வென்ற மும்பை பவுலிங் தேர்வு செய்தது. அதன்படி, பஞ்சாப் அணி முதலில் களமிறங்கியது. தொடக்க ஆட்டக்காரர் பிரப்சிம்ரன் சிங் 9 ரன்னில் அவுட்டானார். கப்டன் ஷிகர்



தவான் 30 ரன்னும், மேத்யூ ஷார்ட் 27 ரன்னும் எடுத்து ஆட்டமிழந்தனர்.

அடுத்து இறங்கிய லிவிங்ஸ்டோன், ஜிதேஷ் சர்மா ஜோடி மும்பை பந்துவீச்சை நாலாபக்கமும் சிதறடித்து சிக்சர், பவுண்டரிகளை விளாசியது.

லிவிங்ஸ்டோன் அரை சதம் கடந்தார். இறுதியில் பஞ்சாப் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 3 விக்கெட் இழப்புக்கு 214 ரன்களை குவித்தது.

லிவிங்ஸ் டோன் 42 பந்தில் 82 ரன்னும், ஜிதேஷ் சர்மா 27 பந்தில் 49 ரன்னும் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இதையடுத்து, 215 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் மும்பை அணி களமிறங்கியது.

இதில் அதிக பட்சமாக இஷான் கிஷான் 41 பந்துகளில் 75 ரன்கள் எடுத்து அசத்தினார்.

தொடர்ந்து, சூர்யகுமார் யாதவ் 66 ரன்களும், கேமரன் கிரீன் 23 ரன்களும் எடுத்தனர். திம் டேவிட் 19 ரன்களுடன், திலக் வர்மா 26 ரன்களுடன் ஆட்டமிழக்காமல் விளையாடினர். இந்நிலையில், ஆட்டத்தின் முடிவில் 18.5 ஓவரில் 216 ரன்கள் எடுத்து மும்பை அணி ஆட்டத்தை கைப்பற்றியது.(4)

# இது எனக்கு கடைசி ஐ.பி.எல் கிடையாது

## தொகுப்பாளரின் கேள்விக்கு டோனி பதில்

சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் கப்டன் டோனி. நடப்பு ஐ.பி.எல் தொடருடன் ஓய்வு பெறுவார் என்று பரவலான கருத்துக்கள் நிலவி வந்தது. ஆனால், தனது ஓய்வு குறித்து டோனி இது வரை எந்தவித அதிகார பூர்வ அறிவிப்பும் வெளியிட வில்லை.

இந்நிலையில், லக்னோவில் நேற்று முன்தினம் லக்னோ சுப்பர் ஜெயண்ட்ஸ், சென்னை சுப்பர் கிங்ஸ் அணிகள் மோதின. இப்போட்டிக்கான டாஸ் சுண்டப்பட்டது. டாஸ்வென்ற சென்னை கப்டன் டோனி முதலில் பந்துவீச்சை தேர்வு செய்தார். இதன்போது தொகுப்பாளர் டேனி மோரிசன், இது உங்கள் கடைசி ஐ.பி.எல் மைதானத்தில் இரசிகர்களின் ஆதரவால் மகிழ்ச்சி அடைகிறீர்களா? என டோனியிடம் கேட்டார். அதற்கு பதிலளித்த டோனி, இதுதான் என் கடைசி ஐ.பி.எல் என்று நீங்கள் முடிவு செய்துள்ளீர்கள். ஆனால், நான் முடிவு செய்ய வில்லை என தெரிவித்தார். உடனடியாக டேனி மோரிசன் டோனியைப் பார்த்து, நீங்கள் அடுத்த ஐ.பி.எல் தொடரிலும் பங்கேற் பீர்கள் எனக்கு தெரியும் என்றார். அதன்பின் மைதானத்தில் இருந்த இரசிகர்களை நோக்கி பேசிய டேனி மோரிசன், டோனி மீண்டும் வருவார். டோனி அடுத்த ஐ.பி.எல் தொடரிலும் பங்கேற்க வருவார் என கூறினார்.(4)



## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2823

யஸ்மிகா

புத்திசாலிகளுக்கு எப்போதும் அவ்வளவு எளிதில் காதல் அமையாது என்று ஆய்வில் கூறப்படுகிறது.




டேய் புரிஞ்சு போச்சுடா இதனால தான் நமக்கு லவ் செட் ஆகல போல அப்ப நானும் ஒரு புத்திசாலி தான்.

நித்தியா

ஒரு நாளாவது கரெக்டா 8.30 மணிக்கு ஆபிஸ் போகலாம்னு பார்க்கிறேன்.. முடிய மாட்டேங்குதே ஏன்டா... என்ன ஆச்சு?



எனக்கு இன்னும் வேலையே கிடைக்கலை அதான் பிரச்சினை

சுபராஜ்

லியோ படத்தில் விஜயுடன் அதிக காட்சியில் ஜனனி நடிப்பதாக தகவல் வெளியாகியுயுள்ளது.



இருக்காதா பின்ன அண்ணீட ஊராச்சே...

நிசாந்தன்

செய்தி- குடி போதையில் மது என நினைத்து பெற்றோலை குடித்தவர் பலி...



ஒரு லீற்றர் பெற்றோல், எமலோகம் வரை போயிருக்கு... நல்ல மைலேஜ்

துரியான்

டாக்டர்- சார் உங்களுக்கு பையன் பிறந்திருக்கான். சுகப்பிரசவம்



கணவர்- ஹலோ யார கேட்டு நீ சிவபிரகாசம்னு பேர் வச்ச அது சிவபிரகாசம் இல்ல சுகப்பிரசவம்

விமேஸ்

சார், 1 லீற்றர் பெற்றோல் போட்டா 100 கிலோமீற்றர் போகுற மாதிரி உங்கள் கடையில புல்லட் கிடைக்குமா?




ஓ.. இருக்கு சேர் ஆனா ஒரு கண்டிசன் பெற்றோல் போட்டு 80 கிலோமீற்றர் வரை தள்ளிட்டு தான் போகனும்...அப்புறமாதான் ஸ்ராட் பண்ணி போகனும்..

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை**

**வியாபார முகாமைத்துவமாணி பட்டப்படிப்பு 2021/2022**

**Bachelor of Business Management Degree Programme-2021/2022**

**புதிய அனுமதி -2023**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடத்தினால் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தினூடாக நடாத்தப்படும் தமிழ் மொழி மூலமான மூன்று வருட கால வியாபார முகாமைத்துவமாணிக் கற்கைநெறிக்கு புதிய மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**அனுமதிக்கான தகைமைகள் :**

✦ க.பொ.த. (உ/த) பரீட்சை - 2020 அல்லது அதற்கு முன்னர் எப்பாடப் பிரிவில் இருந்தாயினும் சித்தியடைந்திருப்பதுடன் பொது அறிவுப் பரீட்சையில் ஆகக்குறைந்தது 30% ஆன புள்ளிகளைப் பெற்று பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதியானவர்கள்.

**முக்கிய குறிப்பு :** இலங்கைப் பல்கலைக்கழகமொன்றில் உள்வாரியாக பட்டப்படிப்பொன்றுக்காக பதிவுசெய்தவர்கள் விண்ணப்பிக்கலாகாது.

**விண்ணப்பப்படிவங்களைப் பெறுதல் :**

யாழ். பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் விண்ணப்பப்படிவத்தினை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம். (காலை 08.30 மணி தொடக்கம் மாலை 04.15 மணி வரை)

அல்லது

www.codl.jfn.ac.lk எனும் இணைய முகவரியில் விண்ணப்பப்படிவத்தினை பதிவிறக்கம் செய்து கொள்ள முடியும்.

✦ விண்ணப்ப மற்றும் பரீட்சைக் கட்டணமாக ரூபா 1000.00 இனை 050132150001410 என்ற மக்கள் வங்கிக் கணக்கிலக்கத்தில் செலுத்தி பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்தல் வேண்டும்.

**விண்ணப்பப்படிவங்கள் சமர்ப்பித்தல்:**

பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பபடிவங்கள் நேரடியாக திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் சமர்ப்பிக்கலாம்.

அல்லது

உதவிப் பதிவாளர், திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்க முடியும். தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் "வியாபார முகாமைத்துவமாணி பட்டப்படிப்பு - 2021/2022" என தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

**முக்கிய குறிப்பு :** விண்ணப்பப்படிவத்துடன் க.பொ.த உயர்தர பரீட்சை பெறுபேற்றுச் சான்றிதழின் பிரதியினையும் இணைத்தல் வேண்டும்.

**விண்ணப்ப முடிவுத்திகதி : 31.05.2023 (புதன்கிழமை)**

**(விண்ணப்ப முடிவுத் திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது)**

மேலதிக விபரங்களுக்கு : 021 222 3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளவும்.

**பதிவாளர்**

(சி-6483)


# டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம்

(கொழும்பு)

நாட்டில் பரவி வரும் புதிய டெங்கு பிறழ்வால், எதிர்காலத்தில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கலாம் என ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் நோய் எதிர்ப்பு, ஒவ்வாமை பிரிவின் பிரதானி வைத்தியர் சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ளார்.

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகமும் சிறுவர்களுக்கான டெங்கு நோய் எதிர்ப்பு சக்தி தொடர்பான ஆய்வொன்றை மேற்கொண்டுள்ளது.

எதிர்காலத்தில் டெங்கு நோய்க்கான தடுப்பூசிகள் வழங்கப்பட்டால் இந்த ஆய்வின் தகவல்கள் மிகவும் முக்கியமானதாக இருக்கும் என நோய் எதிர்ப்பு, ஒவ்வாமை பிரிவின் பிரதானி வைத்தியர் சந்திம ஜீவந்த தெரிவித்தார்.

இதேவேளை, மேல் மாகாணத்தில் அதிகரித்து வரும் டெங்கு நோயாளர்களை கட்டுப்படுத்த டெங்கு செயலணியை செயற்படுத்துமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

மேலும், டெங்கு நுளம்புகள் பெருகும் இடங்கள் தொடர்பாக மக்கள் அவதானமாக இருக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (நி)

# இந்திய விமானப்படைத் தளபதி - பாதுகாப்பு செயலர் சந்திப்பு

(கொழும்பு)

இலங்கை வந்துள்ள இந்திய விமானப்படைத் தளபதி ஏர் சீஃப் மார்ஷல் வி.ஆர்.சௌத்ரிக்கம் பாதுகாப்புச் செயலாளர் கமால் குணரத்னவுக்கும் இடையிலான சந்திப்பு பாதுகாப்பு அமைச்சில் இடம்பெற்றுள்ளது. (நி)



# வெசாக் விடுமுறையை முன்னிட்டு விசேட போக்குவரத்து சேவைகள்

(கொழும்பு)

வெசாக் போயா விடுமுறையை முன்னிட்டு விசேட போக்குவரத்து சேவைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இன்றுமுதல் நாளை மறுதினம் வரை விசேட ரயில் சேவைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக ரயில்வே பிரதிப் பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை விசேட பஸ்சேவைகளும் முன்னெடுக்கப்படவுள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. (நி)

# ரூபாவின் பெறுமதி மீண்டும் உயர்வு

(கொழும்பு)

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி தொடர்பில் மத்திய வங்கி தகவல் வெளியிட்டுள்ளது.

இதன்படி நேற்று முன்தினத்துடன் ஒப்பிடும் போது டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதி நேற்று சற்று அதிகரித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள நாணய மாற்ற விகிதங்களின்படி அமெரிக்க டொலரின் விற்பனை விலை 326.62 ரூபாவாகவும் கொள்வனவு விலை 312.50 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது. (நி)

# இராசிபலன்

**05.05.2023**
**சித்திரை 22, வெள்ளிக்கிழமை**
**பூரணை முன்னிரவு 11.26 மணிவரை சித்திரப் பூரணை விரதம், வெசாக் பண்டிகை**

**சுவாதி முன்னிரவு 10.02 மணிவரை**
**சுபநேரம் 5.56-7.26 மணிவரை**

**சந்திராஷ்டமம்**
**உத்தரட்டாதி, ரேவதி**

**வளவன்**

**மேஷம்**
வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், விருந்தினர் வருகையுண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கடகம்**
பெற்றோர் மீது பிரியம் கூடும், நம்பிக்கைகள் நடைபெற தும்பிக்கையானை வழிபட வேண்டிய நாள், வாகன சுகமுண்டு, மகிழ்ச்சிதரும் பயணங்கள் இடம்பெறலாம்.

**துலாம்**
குடும்பத்தில் பெரியவர்களின் சொற்களைக் கேட்டு நடப்பது நல்லது, வழிபாட்டால் மகத்துவம் காண்பீர்கள், பெரிய மனிதர்களின் தொடர்புகள் அனுகூலம் தரும்.

**மகரம்**
உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், கனவுகள் நனவாக கற்பக மூர்த்தியை வழிபட வேண்டிய நாள், காரிய அனுகூலமுண்டு.

**ரிஷபம்**
உடல் நலன் சீராகும், கடன் சுமை குறைய வழிவகை செய்வீர்கள், விரதம் வழிபாடுகளில் ஆர்வம் கூடும், தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், காரிய அனுகூலமுண்டு.

**சிம்மம்**
நண்பர்களால் நம்பிக்கைகள் நடைபெறலாம், பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், தொழில் அதிகாரிகள் ஆதரவைப் பெறுவீர்கள், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்**
காரியங்களில் வெற்றிபெற கணபதியை வழிபட வேண்டிய நாள், , பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், பயணங்களால் பலனுண்டு, உறவினர் சந்திப்புண்டு.

**கும்பம்**
இறை வழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள், வீட்டுத்தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் எண்ணம் உருவாகும், ஆரோக்கியத்தில் முன்னேற்றமுண்டு.

**மிதுனம்**
வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பெருமைகள் வந்து சேர கணபதியை வழிபட வேண்டிய நாள்.

**கன்னி**
உடல் நலம் சீராக உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், திடீர் பண வரவு மனதிற்கு மகிழ்ச்சி தரும் எடுத்தகாரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**தனுசு**
புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், செய்தொழிலில் எதிர்பார்ப்புகள் நிறைவேறும் வாய்ப்புண்டு, குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்,

**மீனம்**
கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், எடுத்த காரியங்களை முடிப்பதில் கூடிய அக்கறை காட்ட வேண்டிய நாள், கௌரவக் குறைவான நாள்.

**நற்பண்பு தனக்குத் தானே பரிசாகும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனப்பிரச்சினையை தீர்த்தாலே நாட்டை கட்டியெழுப்ப முடியும்

## கஜேந்திரன் எம்.பி



(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா அரசானது இனப் பிரச்சனைக்கான ஒரு தீர்வை கொண்டு வராமல் புதிய புதிய சட்டங்களை கொண்டு வருவதன் மூலமோ அல்லது இருக்கும் அரச நிறுவன்ங்களை பல பிரிவுகளாக பிரிப்பதன் மூலமோ தனியார் மயப்படுத்துவதன் மூலமோ புதிய புதிய ஆணை குழுக்களை உருவாக்குவதன் மூலமோ ஒரு பொழுதும் இந்த நாட்டை கட்டி எழுப்ப முடியாது என பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் இந்த அரசாங்கம் ஒரு நேர்மையான நேர்வழியில் செல்வதற்கு திருட்டுத்தனமாக தங்களுக்கு வேண்டப்படுகின்றவர்களுக்கு இந்த அரச நிறுவனங்களை விற்று அதில் இலாபம் சம்பாதிக்க முற்படுகின்றார்களா? என்ற ஒரு கேள்விதான் எழுகின்றது.

புதிய பயங்கரவாதச் எதிர்ப்புச் சட்டம் என்ற ஒன்றைக் கொண்டு வருவதற்கு முயற்சிக்கின்றனர். அதனை தமிழர்கள் நூற்றுக்கு நூறு வீதம் எதிர்க்கின்றோம் எங்களை பொறுத்தவரையில் ஏற்கனவே இருக்கும் பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கப்பட வேண்டும் அதற்கு பதிலாக பயங்கரவாத எதிர்ப்பு சட்டமோ அல்லது வேறு எந்த சட்டங்களோ கொண்டுவரக் கூடாது.

எங்களை பொறுத்தவரையில் இனப்பிரச்சினைக்கு ஒரு சமஸ்டி அடிப்படையிலான தீர்வு எட்டப்படாத வரைக்கும் எத்தகைய சட்டங்களை கொண்டு வந்தாலும் என்ன? எத்தகைய தனியார் மயப்படுத்தல்களைக் கொண்டு செய்தால் என்ன? எத்தனை கண்துடைப்பு நடவடிக்கைகளை செய்தால் என்ன? இந்த நாட்டை இவர்களால் கட்டி எழுப்ப முடியாது.

ஆகவே இவ்வாறான பித்தலாட்டங்களை கைவிட்டு இனப் பிரச்சனைக்கு நிரந்தரமான தீர்வை கொண்டு வருவதன் மூலமே இந்த நாட்டினுடைய பொருளாதாரத்தை கட்டி எழுப்ப முடியும்என தெரிவித்தார்.(4-6-315)

## சடலத்தை பொறுப்பேற்கவும்

(மன்னார்)

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு நோயாளர் காவுவண்டி மூலம் திடீரென சுகவீனமுற்ற 70 வயது மதிக்கத்தக்க கிருஸ்ணபிள்ளை என்வர் கடந்த 20 ஆம் திகதி அன்று அனுமதிக்கப்பட்டார்.

இவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அன்றைய தினமே இடமாற்றப்பட்டு சிகிச்சை பலனின்றி 22 ஆம் திகதி விடுதி - 10 இல் இறந்துவிட்டார். இவரின் மேலதிக தகவல்கள் எதுவும் கிடைக்கப்பெறவில்லை.

இவரின் சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. இச் சடலம் இதுவரையிலும் யாராலும் உரிமை கோரப்படவில்லை.

இவர்கள் தொடர்பான மேலதிக தகவல்கள் இன்மையினால் குறித்த சடலத்தினை அடையாளம் காட்டி உரியவர்கள் பெற்று கொள்ளுமாறு யாழ்.போதானா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (4)

# உடற்கல்வி டிப்ளோமா

## கற்கை நெறியின் வெள்ளி விழா

(யாழ்ப்பாணம்)

உடற்கல்வி டிப்ளோமா கற்கை நெறி ஆரம்பித்து 25 வருடங்களில் தடம்பதிக்கும் இவ்வாண்டில் உடற்கல்வி டிப்ளோமா ஆசிரிய சங்கத்தால் வெள்ளிவிழா முன்னெடுக்கப்பட வுள்ளது. அதில் முதல் கட்டமாக மேசைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி இன்று வெள்ளிக்கிழமை உடற்கல்வி டிப்ளோமா ஆசிரிய சங் கத் தலைவர் ப.தர்மகுமாரன் தலைமையில் மருதனார்மடம் Nothern sports college இல் நடைபெறவுள்ளது.

இந்த வெள்ளி விழா நிகழ்வினை உடற்கல்வி கற்கை நெறியின் தலைவர் கலாநிதி சி.சபா ஆனந்த சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

மேசைப் பந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதி நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக முன்னாள் துணைவேந்தர் வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளையும் சிறப்பு விருந்தினராக முகாமைத்துவ கற்கை நெறியின் சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி தேவரஞ்சினி சிவாஸ்கரன் கலந்து சிறப்பிக்க உள்ளனர். (4)



யாழ்.வண்ணை குளங்கரை மருதடி ஸ்ரீ காமாட்சி அம்[illegible] பூர்வமாக இடம்பெற்றது.

# விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் தொழில் உரிமைத்துவம் சிறிய வியாபார முகாமைத்துவமும் உயர்தர சான்றிதழ் (Advanced Certificate Programme in Entereprneurship and Small Business Management (ESBM)) கற்கை நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இக் கற்கைநெறிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் 18 வயதிற்கு மேற்பட்டவராக இருப்பதுடன் க.பொ.த சாதாரணதர பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாது 6 பாடங்களில் சித்தி பெற்றிருக்க வேண்டும்.

விண்ணப்பப்படிவங்களை https://ou.ac.lk/advesbm/ என்னும் இணையத்தள முகவரியில் பிரவேசித்து 15.06.2023 வரை விண்ணப்பிக்க முடியும். இந்த ஒரு வருட கற்கைநெறியினை யாழ்.பிராந்திய நிலையத்தில் தமிழ் அல்லது ஆங்கிலத்தில் தொடர முடியும் என்பதுடன் இந்தக் கற்கைநெறியினை பூர்த்தி செய்பவர்கள் திறந்த பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவ படிப்பினைத் தொடர முடியும். மேலதிக விபரங்களிற்கு யாழ்ப்பாணம் பிராந்திய நிலையம் பிறவுண் வீதி, கொக்குவில் எனும் முகவரியூடாகவோ மற்றும் 021-222-3374 தொலைபேசியூடாகவோ தொடர்பு கொண்டு விண்ணப்பிக்க முடியும் என யாழ்ப்பாணப் பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.(4)

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் Diploma in Science in Laboratory Technology (DSLT) கற்கை நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இக்கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் க.பொ.த உயர்தர பரீட்சையில் கீழ்க்காணும் பாடங்களில் ஏதாவது மூன்றில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். Biology. Chemistry. Physics. Combined Mathematics,information & Communication Technology, Science for Technology, Engineering for Technology, Biosystem for technology, Agricultural Science, Applied Mathematics, Pure Mathematics, botany and Zoology. விண்ணப்பப் படிவங்களை https://ou.ac.lk/diplabtech/ என்னும் இணையத் தளமுகவரியில் பிரவேசித்து 31.05.2023 வரை விண்ணப்பிக்க முடியும்.

இந்த ஒரு வருட கற்கைநெறியினை யாழ்.பிராந்திய நிலையத்தில் தொடர முடியும். மேலதிக விபரங்களிற்கு யாழ்ப்பாணம் பிராந்திய நிலையம் பிறவுண் வீதி, கொக்குவில் எனும் முகவரியூடாகவே தொடர்பு கொண்டு விண்ணப்பிக்க முடியும் என யாழ்ப்பாணம் பிராந்திய நிலைய உதவிப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (4)

# வாகன இலக்கத் தகடுகளை பெற்றுக்கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்கள தலைமை அலுவலகத்திலிருந்து கடந்த 28 ஆம் திகதி யாழ்.அலுவலகத்திற்கு கிடைக்கப்பெற்ற வாகன இலக்கத் தகடுகளின் பட்டியல், யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்து பிரதேசங்களிலும் மாவட்ட செயலகத்திலுள்ள மாவட்ட மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்திலும் பொது மக்களின் பார்வைக்காக அறிவிப்புப் பலகையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் மாவட்டச் செயலக இணையத்தளத்திலும்' பார்வையிடலாம்.

https://dmtappointments.dmt.gov.lk என்ற இணையத்தளத்தில் பிரவேசிப்பதன் ஊடாக அல்லது 021 211 7116 என்ற தன்னியக்க தொலைபேசி இலக்கத்தை அழைப்பதன் மூலம் திகதியையும் நேரத்தையும் முற்பதிவு செய்து, அதற்காக தங்கள் கைத்தொலைபேசிக்கு DMT ஆல் அனுப்பப்பட்ட குறுந் தகவலுடன், புதிதாக வாகனங்களைப் பதிவு செய்த உரிமையாளர்கள் வாகனப் பதிவுப் புத்தகம், தேசிய அடையாள அட்டை என்பவற்றையும் மாகாணங்களுக்கிடையே வாகன உரிமை மாற்றம் பெற்றவர்கள் மேற் குறித்த இரு ஆவணங்களுடன் பழைய வாகன இலக்கத்தகடுகள் மற்றும் வாகன இலக்கம் பொறித்த ஒட்டும் தாள் (Sticker) என்பவற்றையும், யாழ். மாவட்ட மோட்டார் வாகனப் போக்குவரத்து அலுவலகத்தில் குறிப்பிடப்பட்ட திகதியில் குறித்த நேரத்திற்கு சமர்ப்பித்து தங்கள் வாகனங்களுக்குரிய இலக்கத் தகடுகளைப் பெற்றுக் கொள்ள லாம் என கேட்டுக் கொள்கின்றேன்.

யாழ்.மாவட்ட போக்குவரத்து திணைக்கள உதவி ஆணையாளர் ஆர்.சிவகரன் அறிவித்துள்ளார். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரமித்த பண்டார தென்னக்கோன்

## பதில் பாதுகாப்பு அமைச்சராக பதவிப்பிரமாணம்

(கொழும்பு)

இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்ன கோன் பதில் பாதுகாப்பு அமைச்சராக பதவிப்பிர மாணம் செய்து கொண்டு ள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கி ரமசிங்க, வெளிநாட்டிற்கு விஜயம் மேற்கொண்டுள்ள மையால், பிரமித்த பண்டார தென்னகோன் பதில் பாது காப்பு அமைச்சராக பதவிப் பிரமாணம் செய்துகொண்டு ள்ளார்.

ஜனாதிபதி நாடு திரும்பும் வரை அமுலாகும் வகை யில், பதில் பாதுகாப்பு அமை ச்சராக பிரமித்த பண்டார தென்னகோன் கடமையாற்ற வுள்ளார்.

ஜனாதிபதிக்கான அதிகார ங்களுக்கு அமைய, பதில் பாதுகாப்பு அமைச்சர் நிய மிக்கப்பட்டுள்ளார். (நி)



# ஆதனப் பெயர்மாற்றம்

யாழ்.மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம்-19, கடற்கரை வீதி, ஆதன இல 62A என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் சொந்தக்காரர் என யாழ். மாநகரசபை ஆதனவரிப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனத்தை செபஸ்ரி சவரிமுத்து பிரசித்த நொத்தாரிசு யோன் பற்றிக் முகதாவில் 05.09.1967 ஆம் திகதியிட்டு 2803 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் அன்ரோனி யோனும் பெண் மரியமுத்துக்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனத்தை திரேசம்மா மகள் கவிரியேல் மடுதீன் பிரசித்த நொத்தாரிசு C.C.பற்றிக் முகதாவில் 1973 ஆம் திகதியிட்டு 73 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் செபஸ்திப்பிள்ளை றெஜிஸ்க்கு வழங்கியுள்ளார்.

பின்னர், சந்தியாப்பிள்ளை றெஜிஸ் பிரசித்த நொத்தாரிசு தீயோ முடியப்பு அந்தோனிப்பிள்ளை முகதாவில் 09.03.1982 ஆம் திகதியிட்டு 280 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் வஸ்தியாம்பிள்ளை பிலிப்பும் பெண் பிலோமினாக்கு வழங்கியுள்ளார்.

பின்னர் வஸ்தியாம்பிள்ளை பிலிப்பும் பெண் பிலோமினா பிரசித்த நொத்தாரிசு ரி.எம்.அந்தோனிப்பிள்ளை முகதாவில் 20.03.1983 ஆம் திகதியிட்டு 412 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் சந்தியாப்பிள்ளை றேஜிஸ்க்கு வழங்கியுள்ளார்.

பின்னர் செபஸ்தி சந்தியாப்பிள்ளை பிரசித்த நொத்தாரிசு ரி.எம்.அந்தோனிப்பிள்ளை முகதாவில் 04.03.1984 ஆம் திகதியிட்டு 528 ஆம் இலக்க பிரிவிடல் உறுதி மூலம் செபஸ்தி மனவல் கைம்பெண் செபமாலையும், மனவல் அல்வீனம்மாவும், மனவல் யசிந்தாவும், மனவல் மக்சி அருள்நேசனும், மனவல் றாஜனி யூலியிற்றும், மற்றும் மனவல் கிப்பெலிற்றாவுக்கு பிரிவிடப்பட்டுள்ளது.

பின் சந்தியாப்பிள்ளை தேவசிகாமணி தனது தத்துவக்காரரான இளையவன் கனகரட்ணம் ஊடாகவும், சந்தியாப்பிள்ளை ரெஜிஸ் தனது தத்துவக்காரரான இளையவன் கனகரட்ணம் மூலம் பிரசித்த நொத்தாரிசு ரி.கணதீபன் முகதாவில் இல.10.07.2017 ஆம் திகதியிட்டு 1113 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதி மூலம் ஆனந்தன் வடலி வீதி, அரியாலை, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பசுபதி குணரெட்ணம் மற்றும் குணரட்ணம் பெண் மொனிக்காவுக்கு வழங்கியுள்ளனர்.

### ஆதன அட்டவணை

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி சுண்டிக்குளி கோவிற்பற்று கண்டிக்குளி இறை (தற்போது பாஷையூர் இறை). GS பிரிவு - J/65, DS பிரிவு யாழ்ப்பாணம். உள்ளூராட்சி சபை - யாழ்ப்பாணம், "கூகை மாவடியும் மறுபிரிவுகளும்".

1. குளி ஒன்பது
2. மேற்படி இறை "கூகை மாவடியும் மறுபிரிவுகளும்" குளி மூன்று தசம் ஒன்பது. இவ்விரு ஆதனங்களும் தற்போது ஒன்றாக்கப்பட்டு, குறித்த ஆதனம் உத்தரவு பெற்ற நில அளவையாளர் மெல்லின் ஞானப்பிரகாசம் அவர்களால் 19.08.2012 ஆம் திகதியில் 1118 ஆம் இலக்கத்தில் அளந்து வரையப்பட்ட நிலஅளவைப்படத்தில் துண்டு 2 எனச் சுட்டப்பட்டு அளந்து கண்டபடி இதன் விஸ்தீரணம் குளிகள் பதினொன்று தசம் ஒன்று நான்கு. இவ் குளிகள் பதினொன்று தசம் ஒன்று நான்கு இனதும் எல்லைகள்,

கிழக்கு - வீதி
வடக்கு - குறித்த 1118 ஆம் இலக்க நில அளவைப்படத்தில் துண்டு 1.
மேற்கு - அல்வின் தேவசகாயத்தினாலும், ஜன்சன் டோறா அனெற்றினாலும் உரிமை கோரப்படும் ஆதனங்கள்,
தெற்கு - குறித்த 1118 ஆம் இலக்க நில அளவைப்பத்தில் துண்டு 3.

இதடங்கலனைத்தும் தற்போது இவ்வாதனத்தை பசுபதி குணரட்ணம் மற்றும் குணரட்ணம் பெண் மொனிக்கா தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ் ஆதனத்திற்கு உரிமைகோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது பசுபதி குணரட்ணம் மற்றும் குணரட்ணம் பெண் மொனிக்கா என்னும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாண மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் இத்தால் தெரிவிக்கப்படுகிறது.

**ஆணையாளர்,**
**மாநகரசபை,**
**யாழ்ப்பாணம்.**

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 160 | 180 | 200 |
| உருளைக்கிழங்கு | 200 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 200 | 240 | 250 |
| தக்காளி | 400 | 250 | 350 |
| மரவள்ளிக்கிழங்கு | 240 | 200 | 200 |
| கோவா | 250 | 200 | 250 |
| கரட் | 160 | 140-230 | 250 |
| பூசணி | 60 | 50 | 50 |
| புடோல் | 200 | 100 | 150 |
| வாழைக்காய் | 120 | 100 | 80 |
| சின்ன வெங்காயம் | 350 | 400 | 450 |
| பெரிய வெங்காயம் | 140 | 120 | 140 |
| பாகற்காய் | 800 | 650 | 500 |
| வெண்டக்காய் | 160 | 120 | 300 |
| கருணைக் கிழங்கு | 180 | 120 | 150 |
| பயற்றங்காய் | 800 | 800 | 500 |
| லீக்ஸ் | 250 | 280 | 350 |
| பீற்றூட் | 240 | 220 | 300 |
| கறிமிளகாய் | 250 | 300 | 200 |
| முருங்கைக்காய் | 1000 | 400 | 1000 |
| போஞ்சி | 450 | 380 | 450 |
| கத்தரிதம்புள்ள | 120 | --- | 150 |
| கீரை - 1 பிடி | 100 | 100-120 | 180 |
| தேசிக்காய் | 450 | 400 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 60-90 | 70-100 |
| இராசவள்ளி | 350 | 250 | 280 |
| வெங்காயப்பூ | --- | --- | 600 |
| முள்ளங்கி | 80 | 100 | 250 |
| பொன்னாங்காணி | 80 | 150 | 50 |
| வல்லாரை | 40 | 50 | 50 |
| ஈரப்பலா | 120 | --- | --- |


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
கி.பா: 18 செவ் 9 சூரி 7 இல்
உயரம்:175 cm
தகைமை/தொழில்:A/L சிறைக்காவலர்
தொ.இ: B/13521

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: ரேவதி
கி.பா: 62 1/4
உயரம்: 5' 5"
தகைமை/தொழில்: O/L கடை
எதிர்பார்ப்பு: வெளிநாடு.உத்தியோகம்
தொ.இ: B/13524

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: திருவோணம் 5 இல்
கி.பா: சூரி. செவ் 6
தகைமை/தொழில்: வெளிநாடு. உத்தியோகம்
எதிர்பார்ப்பு:O/L கப்பல்
தொ.இ: B/13525

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: கேட்டை
கி.பா: 14 1/2 சூரி. செவ்
உயரம் : 165 cm,
தகைமை/தொழில்: BSc, Civil engineer (தனியார்)
எதிர்பார்ப்பு: பட்டதாரி. சைவபோசனம்
தொ.இ: B/13526

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: திருவோணம்
கி.பா: 30
உயரம்:5' 6"
தகைமை/தொழில்: BA அபிவிருத்தி உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு:அரச, தனியார் தொழில்
தொ.இ:G/13551

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: அவிட்டம்
கி.பா:31 3/4
உயரம்:5' 9"
தகைமை/தொழில்: M.B.B.S வைத்தியர்
தொ.இ:G/13561

பிறப்பு: 1995 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம்
கி.பா:63 1/4
தகைமை/தொழில்: B.sc விரிவுரையாளர்
எதிர்பார்ப்பு: தகுந்த வரன்
தொ.இ:G/13571

பிறப்பு: 1994 இந்து
நட்சத்திரம்: கேட்டை
உயரம்:5' 4"
தகைமை/தொழில்:IT software engineer
எதிர்பார்ப்பு: வெளிநாடு / படித்தவரன்
தொ.இ:G/13572

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
**அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை**
**விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை**
**பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் மீது போலி குற்றச்சாட்டு பாடசாலை சமூகம் போராட்டம்



(நெளுக்குளம்)

தரணிக்குளம் கணேசுவரா வித்தியாலத்தின் தமிழ் பாட ஆசிரியர் தொடர்பாக சமூக வலைத்தளங்களில் பரப்பப் பட்டு வரும் போலியான தகவலுக்கு எதிராக பாடசாலை சமூகத்தால் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

நேற்று காலை பாடசாலைக்கு முன்பாக குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதன்போது கருத்து தெரிவித்த போராட்டகாரர்கள், எமது பாடசாலையின் தமிழ் பாட ஆசிரியரான திருமகன் மீது அண்மைக் காலமாக தவறான கருத்துக்கள் சமூக வலைத்தளங்களிலே பதியப்பட்டு வருகின்றது. அதற்கு எமது எதிர்ப்பினை தெரிவித்து கொள்கின்றோம்.

அத்துடன் சமூகத்திற்கு ஏற்பட்ட பிரச்சினை ஒன்றை தட்டிக் கேட்டதற்காக இழிவான முறையில் அவர் பழிவாங்கப்பட்டு கொண்டிருக்கின்றார். அந்த விடயத்தை பாடசாலை சமூகம் சார்பாக வன்மையாக கண்டிப்பதோடு குறித்த நபர்களுக்கு எதிராக உடனடியாக சட்டநடவடிக்கை எடுத்து ஆசிரியருக்கு ஏற்பட்டிருக்கும் களங்கத்தை துடைக்க வேண்டிய கட்டாய நிலைமையில் நாம் இருக்கின்றோம்.

ஒரு தகவலின் உண்மைத் தன்மை தொடர்பாக ஆராயாமல் அதனை பலரும் பகிர்வு செய்தமையானது மோசமான ஒரு முன்னுதாரணத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. எனவே இனியாவது உண்மைத்தன்மையினை உணர்ந்துசெயற்படுமாறு கேட்டுக்கொள்கின்றோம் என தெரிவித்தனர்.(4-6-299)

# உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு மக்களை கடுமையாக பாதிக்கும்

## சுமந்திரன் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

உள்நாட்டு கடன் மறு சீரமைப்பு என்பது மிகவும் மோசமாக எமது மக்களை பாதிக்கக் கூடியது என்று பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்


சர்வதேச நாணய நிதியத்துடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையில் அதாவது உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு செய்யப்பட வேண்டும் என்பது தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது ஆனால் விவரங்கள் எதுவும் கொடுக்கப்படவில்லை.

உள்நாட்டு கடன் மறுசீரமைப்புஎன்பதுமிகவும்மோசமாக எமது மக்களை பாதிக்கக்கூடியது. ஏனெனில் அதில் இரண்டு விதமான அபாயங்கள் உண்டு ஒன்று உள்ளூர் வங்கிகள் இதனால் பாதிப்படையலாம் மற்றையது ஊழியர் சேமலாப நிதி மற்றும் நம்பிக்கை பொறுப்பு நிதி ஆகியவை இந்த உள்நாட்டு கடன் மறு சீரமைப்பின் போது அவற்றினுடைய பெறுமதி வெகுவாக குறைவடைவதற்கான சாத்திய கூறுகள் உண்டு.


ஆகவே மே தினத்தில் அரசாங்கத்தைச் சேர்ந்த கட்சிகள் ஊழியர்கள் பற்றிய பலவிதமான கருத்துக்களை கூறி இருக்கின்றார்கள் ஆகையினால் உள்நாட்டிலே சிறு தொழிலாளர்கள் உழைத்து சேமித்து வைத்துள்ள சிறு தொகையையும் இழக்க கூடிய ஒரு அபாய நிலை இப்போது அவர்களை நெருங்கி உள்ளது. இது விசேடமாக சர்வதேச நாணய நிதியத்துடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் உள்ளடக்கப்பட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (4-6-315)

வரலாற்று சிறப்புமிக்க இரணைமடு கனகாம்பிகை அம்மன் ஆலய தேர்த்திருவிழா நேற்று மிக சிறப்பான முறையில் நடைபெற்றது. (படம்: தேவானந்தன்)





# வீதிக்கு வந்த காட்டு யானை போக்குவரத்து பாதிப்பு



(மன்னார்)

மன்னார்-மதவாச்சி பிரதான வீதி முருங்கன் கட்டுக்கரை பிரதான வீதியூடாக நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை காட்டு யானை ஒன்று திடீரென வீதிக்கு வந்தமையினால் குறித்த வீதியூடாக போக்குவரத்தை மேற்கொண்ட மக்கள் அச்சமடைந்தனர்.

சீரற்ற காலநிலை காரணமாக தொடர்ச்சியாக கடும் மழை பெய்து வரும் நிலையில் கட்டுக்கரை குளம் பகுதியில் உள்ள காட்டுப்பகுதியில் உள்ள யானை ஒன்று வழி தவறி இவ்வாறு பிரதான வீதி பகுதிக்கு வந்துள்ளது.

பின்னர் அப்பகுதியில் உள்ள இளைஞர்கள் மற்றும் வீதியால் சென்றவர்கள் குறித்த யானையை துரத்த குறித்த யானை கட்டுக்கரை குளம் பகுதியூடாக அப்பகுதியில் இருந்து வெளியேறியது.(4-6-285)

# முகநூல் தரிசனம் 139

## வாய்ப்புகள் கிடைப்பது அரிது



ரகுராமன் என்ற செல்வந்தர் தன் மகனுடன் காரில் கோயிலுக்குச் சென்றார். உள்ளே சென்று கடவுளை தரிசனம் செய்துவிட்டு வெளியே வந்தவர், அங்கிருக்கும் யாசகர்களைப் பார்த்தார். அதில் மூன்று பேரைத் தேர்ந்தெடுத்து அவர்கள் கையில் ஒவ்வொருவருக்கும் ரூபாய் 10,000 கொடுத்தார்.

"அப்பா எதற்குப் பணம் கொடுக்கிறீர்கள்?" என்று மகன் கேட்டான். அதற்கு ரகுராமன், "நாம் இவர்களுக்குப் பணம் கொடுத்திருக்கிறோம். இவர்கள் இந்த வாய்ப்பை எப்படிப் பயன்படுத்துகிறார்கள் என்பதை மூன்று மாதம் கழித்து வந்து பார்க்கலாம்" என்று சொன்னார்.

அப்பா சொன்னது புரியாவிட்டாலும் "சரி" என்றான் மகன். மூன்று மாதங்கள் கழித்து மறுபடியும் ரகுராமன் அதே கோயிலுக்கு வந்தார். அங்கு அவர் பணம் கொடுத்த மூன்று பேரில் ஒருவர் மட்டும் அங்கே உட்கார்ந்திருந்தார். அந்த யாசகரிடம் அருகில் சென்ற ரகுராமன் "ஏனப்பா நான்தான் உனக்குப் பணம் கொடுத்தேனே... நீ அதை என்ன செய்தாய்?" என்று கேட்டார்.

"நீங்கள் கொடுத்த பணத்தை அப்படியே வைத்திருந்து தினமும் அதில் செலவு செய்து சாப்பிட்டேன். எல்லாம் தீர்ந்துவிட்டது. மறுபடியும் நான் இதே பிச்சை எடுக்கும் இடத்திற்கு வந்துவிட்டேன்" என்றான்.

"மற்றவர்கள் எங்கே?" என்றார் ரகுராமன்.

எதிரே உள்ள ஒரு ஐஸ்கிரீம் கடையைக் காண்பித்து "நீங்கள் கொடுத்த பணத்தில் ஐஸ்கிரீம் கடை வைத்து இன்று நல்ல வியாபாரம் செய்து, நல்ல நிலைக்கு வந்து விட்டான்" என்று பதில் சொன்னான்.

ரகுராமன் தன் மகனுடன் அந்தக் கடைக்குள் நுழைந்து "என்னை தெரிகிறதா?" என்றார்.

"ஐயா பணம் கொடுத்த உங்களை எப்படி மறக்க முடியும்?"என்று சொன்னான் அவன்.

"ஐஸ்கிரீம் கடை எப்படி வைத்தாய்?" எனக் கேட்டார்.

"நீங்கள் கொடுத்த பணத்தில்தான் வைத்தேன். நான் நேர்மையாக உழைத்ததால் இன்று அதிகமான லாபம் கிடைத்து. நல்ல நிலையில் இருக்கிறேன். இதற்கு நீங்கள்தான் காரணம்" என்று அவரை வாழ்த்தி, பணிவுடன் பேசினான்.

"சரி உங்களில் இருக்கும் மற்ற ஒருவனுக்கும் பணம் கொடுத்தேனே. அவன் என்ன ஆனான்?" என்று கேட்டார்.

"நீங்கள் கொடுத்த பணத்தில் அவன் பந்தயத்தில, ரேஸ் குதிரை, தேவையில்லாததையெல்லாம் வாங்கி செலவழித்து அனைத்து பணமும் அவனிடமிருந்து சென்றுவிட்டது. அதனால் அவன் இப்போது என்ன செய்வது என்று தெரியாமல் கெட்ட பழக்கங்களுக்கு அடிமையாகி அதே போல் மறுபடியும் யாசகம் எடுத்து, தன் கையில் கிடைக்கும் பணத்தை அதே கெட்ட வழியில் செலவழிக்கிறான்"என்று சொன்னார்.

அப்போது தன் மகனிடம் "பார்த்தாயா" நாம் மூன்று பேருக்கு வாய்ப்பு கொடுத்தும் அதில் ஒருவர்தான் அந்தப் பணத்தை நல்ல வழியில் செலவு செய்து, இன்று நல்ல நிலையில் இருக்கிறார். நமக்கு வாய்ப்புகள் எப்போதும் கிடைப்பது அரிது. அந்த வாய்ப்பை நன்றாகப் பயன்படுத்திக் கொண்டால், நன்கு முன்னேறலாம்" என்றார்.

அப்பா சொன்ன அறிவுரை இப்போது மகனுக்குப் புரிந்தது.

**அன்பு வாசகர்களே!**
முகநூலில் உங்கள் மனதைத் தொடும் பதிவுகளை வலம்புரியின் "முகநூல் தரிசனம்" பகுதிக்கு உங்கள் பெயரைக் குறிப்பிட்டு Valampurii Seithy எனும் வலம்புரி முகப் புத்தகத்திற்கு Share செய்யுங்கள் அல்லது 076 636 3378 எனும் viber இலக்கத்திற்கு அல்லது valampurii@yahoo.com எனும் E-Mail இற்கு அனுப்பி வையுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
# க.பொ.த (சா/த) ஆண்டிறுதிப் பரீட்சை வினாத்தாள்
# விஞ்ஞானம் பகுதி - II

## பகுதி B


மூன்று வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்கவும்

05. தன்னை நோக்கி வரும் பந்தை ஓங்கி அடிக்கத் தயாராகும் ஒரு கிரிக்கெட் வீரரின் படம் அருகில் காட்டப்பட்டுள்ளது. அதன்போது அவரது உடலில் ஏற்படும் மாற்றங்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.




a = சுவாச வேகம் கூடுதல்
b = இதயத்துடிப்பு வீதம் கூடுதல்.
c = தசைகளை நோக்கிச் செல்லும் குருதியின் அளவு அதிகரித்தல்
d = அதிக வியர்வை வெளியேறல்

(i) பந்தை சரியாக அடிக்கும்போது உடல் அங்கங்களுக்கிடையே நிகழும் தொடர்பு எவ் விசேட பெயரால் அழைக்கப்படும்.
(ii) மேற்படி செயற்பாடு அங்கி உடலில் இரு முறைகளில் நிகழும் அவ்விரு முறைகளும் எவை?
(iii) பந்தைப் பார்த்ததும் மட்டையால் அடித்தல் எனும் செயற்பாட்டிற்குரிய நரம்புக் கணத்தாக்கம் கடத்தப்படும் பாதை கீழே தரப்பட்டுள்ளது a,b ஆகிய இடைவெளிகளை நிரப்ப பொருத்தமான சொற்களை எழுதுக.




(iv) சுவாச வீதம் அதிகரித்தல் மற்றும் இதயத்துடிப்பு வீதம் அதிகரித்தல் ஆகிய செயற்பாடுகளில் பங்களிப்பு செய்யும் மூளையின் பகுதி யாது?
(v) கை மற்றும் கால் ஆகிய உடற்பாகங்களில் காணப்படும் தசை வகை யாது? இதயத்தசைக்கும் மேற்படி தசைக்கும் இடையேயான வேறுபாடு ஒன்று தருக.
(vi) குளுக்கோசு தகனமடைந்து தசை இழையங்களுக்கு தேவையான சக்தி வழங்கப்படுகிறது. மேற்படி தாக்கம் நிகழும் கலப்புன்னங்கத்தைப் பெயரிடுக.
(vii) கிரிக்கெட் வீரர் ஓடும் போது ஆட்டமிழக்க அண்மித்திருக்கும் சந்தர்ப்பத்தில் அவரது உடலினுள் உடனடியாக குருதியினுள் சேர்க்கப்படும் ஓமோன் எது?
(viii) இழையங்களை வகைப்படுத்தும் போது குருதி இழையம் உள்ளடக்கப்படும் இழைய வகை யாது?

(B) ஒளித்தொகுப்பு செயன்முறையை விளக்குவதற்கு மாணவனொருவன் தயார்படுத்திய கோட்டுப்படம் கீழே தரப்பட்டுள்ளது. அதனைப் பயன்படுத்த கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.




(i) மேலே A,B,C,D இடைவெளிகளுக்கான பொருத்தமான சொற்களை எழுதுக?
(ii) ஒளித்தொகுப்பின் சூழலியல் முக்கியத்துவம் இரண்டினைக் குறிப்பிடுக.


(C) குளுக்கோசு ஒட்சியேற்றப்பட்டு சக்தி உற்பத்தி செய்யப்பட்ட அவசியமான ஒட்சிசன் வாயு சுவாச மேற்பரப்பு மூலம் வழங்கப் படும்.
(i) உட்சுவாச வெளிச்சுவாச செயன்முறைகளின் போது புறபழுவிற்கிடையிலான தசைகளின் தொழிற்பாட்டையும் பிரிமென்றகட்டின் அசைவும் மாறுபடும் விதத்தையும் விளக்குக.

| | உட்சுவாசம் | வெளிச்சுவாசம் |
|---|---|---|
| புற பழுவிற்கிடையான தசை | | |
| பிரிமென்றகடு | | |

(ii) வாயுப்பரிமாற்றத்தை வினைத்திறனாக நிகழ்த்த சுவாசச் சிற்றறை கொண்டுள்ள சிறப்பியல்புகள் இரண்டு தருக?

(iii) சுவாசப்பைகள் தவிர்ந்த மனிதரில் கழிவகற்றல் மேற்கொள்ளும் ஏனைய இரண்டு கழிவகங்களைத் தருக.


(A) கலவைகளில் அடங்கியுள்ள கூறுகளை வேறாக்க பல்வேறு பிரித்தெடுப்பு முறைகள் பயன்படுத்தப்படும். கலவைகள் சிலவற்றின் கூறுகளை பிரித்தெடுக்கும் ஒரு வரிப்படம் கீழே தரப்பட்டுள்ளது.




(i) கலவை என்றால் என்ன?
(ii) A,B ஆகிய பிரித்தெடுப்பு முறைகளை எழுதுக?
(iii) 'புரொப்பேன்' பியுற்றேன் என்பன L,P வாயுவின் கூறுகளாகும். புரோப்பேனின் கட்டமைப்புச் சூத்திரத்தை வரைக.
(iv) கறியுப்பு உற்பத்தியின்போது முதலாம் பாத்தியில் வீழ்படிவாகும் பதார்த்தம் எது?
(v) கறுவா எண்ணையும் நீரும் ஒன்றோடொன்று கலக்காமைக்கு காரணத்தை விளக்குக.


(B) சில வகை நோயாளிகளுக்கு சிகிச்சையளிப்பதற்கு சேலைன் கரைசலாக $0.5gmoldm^{-3}$ யுடைய (m/v) NaCl பயன்படுத்தப்படும். ( NA= 23, CL= 35.5)
(i) $0.5gdm^{-3}$ கரைசலை தயாரிக்கும் முறையை மூன்று படிமுறைகளில் எழுதுக?
(ii) $0.5mold^{-3}$ செறிவுடைய MaCl கரைசலை தயாரிக்க தேவையான NaCl இன் திணிவை காண்க.
(iii) NaCL இன் நீரில் கரைதிறனை அதிகரிக்கச் செய்ய மேற்கொள்ளக்கூடிய ஒரு நடவடிக்கையை எழுதுக?

(C) வளிமண்டல அமுக்கத்தின் 100°C யிலுள்ள நீர் 100°C நீராவியாக மாறும்போது நிகழும் வெப்ப விளைவைக் காட்டும் சக்தி மட்ட வரைபு கீழே தரப்பட்டுள்ளது.




(i) $H_2O(l) \longrightarrow H_2O(g)$ ஆக மாறுவது எவ்வகையாக வெப்ப விளைவுஆகும்..
(ii) மேற்படி சக்தி வரைபின் படி இவ்விளைவு புறவெப்பத் தாக்கமா? அக வெப்பதாக்கமா? என எழுதுக?
(iii) பின்வரும் தாக்கங்கள் அகவெப்பத்தாக்கமா? புற வெப்பத் தாக்கமா எனக் குறிப்பிடுக.
a) சுண்ணாம்பு உற்பத்தி
b) கலச்சுவாசம்
(iv) NaOH நீர்க்கரைசல் $50cm^3$ ஐயும் HCL நீர்க்கரைசல் $50\ cm^3$ உம் ஒன்று கலக்கும் போது 10°C யால் கரைசலின் வெப்பநிலை உயர்ந்தது. (நீரின் தன்வெப்பக்கொள்ளளவு $4200Jkg^{-1o}C^{-1}$)
a) கரைசலின் வெப்ப விளைவைக் கணிக்க?
b) மேற்படி கணித்தலை மேற்கொள்ள நீங்கள் எடுக்கும் எடுகோள்கள் இரண்டு தருக.

07. (A) கம்பிச் சுருள் ஊடாக மின்னோட்டம் பாயும்போது தோன்றும் காந்தப்புலம் தொடர்பாக அறிய தயார்ப்படுத்தப்பட்ட அமைப்பை படம் காட்டுகின்றது.




(i) ஆளி S மூடப்படும் போது புள்ளிக் கோடிடப்பட்ட இடத்தில் பெறப்படும் அவதானத்தைக் குறிப்பிடுக.
(ii) ஆளி S மூடப்படும் போது நெருக்கற் தராசின் வாசிப்பு அதிகரித்தமைக்கான காரணத்தை குறிப்பிடுக.
(iii) சுருளின் எண்ணிக்கை அதிகரிக்கும் போது நெருக்கற் தராசின் வாசிப்பிற்கு யாது நிகழும் எனக் குறிப்பிடுக.
(iv) R எனக் குறிக்கப்பட்டுள்ள துணைக்கூறின் தொழிற்பாடு யாது?

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

(B) அன்றாட வாழ்வில் பயன்படுத்தப்படும் உபகரணங்கள், இயந்திரங்களில் அசையும் பகுதிகள் உள்ளன. இங்கு ஏற்படும் உராய்வினால் இயந்திரங்களின் பாகங்கள் தேய்வடையும்.

(i) இயந்திரங்களின் உராய்வைக் குறைக்க மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கை ஒன்று தருக?

(ii) உராய்வின் காரணமாக இயந்திரங்களில் சக்தி விரயம் ஏற்படும். இவ்வாறு விரயமாகும்போது உருவாகும் சக்தி வடிவங்கள் 2 தருக.


(iii)




மெதுவாக இழுக்கும் போது அதிக விற்றராசு வாசிப்பைக் காட்டுவது அமைப்பு Aயிலா அல்லது B யிலா என எழுதுக?

(iv) மேலே B யில் உங்கள் விடைக்கான காரணம் யாது?

(C) வீட்டு மின்சுற்றின் வரிப்படம் மேலே காட்டப்பட்டுள்ளது.




(i) வீட்டு மின் சுற்றுக்கு வழங்கப்படும் மின்னோட்டம் நேரத்துடன் மாறுபாடும் விதத்தை காட்டும் வரைபை வரைக.

(ii) பிரதான ஆளி புவிக்கம்பி என்பவற்றின் பயன் என்ன;

(iii)100W வசபுடைய மின் குமிழ்கள் 10, நாளொன்றிற்று 5 மணி நேரம் எரிந்தால் 30 நாட்கள் பயன்படுத்தப்படும் மின் அலகுகளின் எண்ணிக்கையைக் காண்க?

(D) உருவில் மனிதனொருவன் வாயு பலூன் உதவியுடன் நீரில் மிதப்பது தரப்பட்டுள்ளது.



(i) நீர் மேற்பரப்பில் இருந்து நீர் நிலையின் ஆகும். 10 m எனின் அதன் அடியில் ஏற்படுத்தப்படும் அமுக்கத்தை காண்க? (நீரின் அடர்த்தி - 1000 $kgm^{-3}$, $g=10ms^{-2}$)

(ii) மனிதன் பலூன் மூலம் இடம் பெயர்க்கப்படும் நீரின் கனவளவு 0.05 $m^3$ ஆகும் இதனால் நீரினால் ஏற்படுத்தப்படும் மேலுதைப்பு யாது?

(iii) அன்றாட வாழ்வில் வளி மண்டல அமுக்கம் பயன்படும் சந்தர்ப்பங்கள் ஒன்று தருக?

3. (A) கலமொன்றின் கருவில் காணப்படும் நிறமூர்த்தங்களின் எண்ணிக்கை, வடிவம், பருமனில் மாறுபட்டாலும் குறித்த துங்கியொன்றுக்கு அதன் எண்ணிக்கை மாறிலி ஆகும்.

(i) மனிதக் கடற்கலமொன்றில் காணப்படும் நிறமூர்த்தங்களின் எண்ணிக்கை யாது?

(ii) ஒத்த இயல்புகளைக் கொண்ட நிறமூர்த்தச்சோடி எவ்வாறு அழைக்கப்படும்?

(iii) பரம்பரையலகு என்றால் என்ன?


(iv) கலமொன்றில் காணப்படும் ஹீமோகுளோபீன் உற்பத்திக்குக் காரணமான பரப்பரையலகு ஏற்படும் நோய் நிலைமை எது?

(v). சிவப்பு பச்சை நிறக்குருடு மனிதரிடையே அதிகமாக காணப்படும் இலிங்கமிணைந்த பரம்பரையலகு நோய் ஆகும். X நிறமூர்த்தத்தில் காணப்படும் பின்னடைவாக பரம்பரையலகே அதற்குக் காரணமாகும். சிவப்பு பச்சை நிறக்குருட்டுக்கு காரணமான காவித்தாயின் $X^CX^c$ ஆகும். சுகதேகி தந்தையின் $X^CY$ ஆகும். இவர்களது பிள்ளைகளுக்கு இந்நோய் தலை முறையுரிமையடையும் விதத்தை ஒரு கோட்டுப்படத்தின் மூலம் காட்டுக.

(vi) உணவு மற்றும் விவசாயத் துறையில் பரம்பரையாக தொழில்நுட்பம் பயன்படும். சந்தர்ப்பங்கள் இரண்டு தருக?

(vii) அங்கிகளில் கூர்ப்பு செயற்பாடுகளுக்கு ஒடுக்கற்பிரிவு பங்களிப்பு செய்யும் விதத்தை சுருக்கமாக எழுதுக.

(B) இரண்டு உவர்கலங்கள், ஒரு மின்குமிழ், வோல்ற்றுமானி, அம்பியர்மானி என்பவற்றைப் பயன்படுத்தி மாணவர்கள் செய்த மின்சுற்றுகள் மூன்று கீழே தரப்பட்டுள்ளன.





(i) மேற்படி சுற்றுகளில் மின்குமிழ் ஒளிரும் மின்சுற்று எது?

(ii) அது தவிர ஏனையவற்றில் மின்குமிழ் ஒளிராதிருக்க காரணம் என்ன?

(iii) வோல்ற்று மானியும் அம்பியர்மானியும் ஒரு சுற்றில் தொடுக்கப்படவேண்டிய முறைகளை ஒழுங்காகத் தருக?

(iv)வினா (i) இற்கான விடைக்குரிய சுற்றில் வோல்ற்று மானியின் வாசிப்பு 3V ஆகும். அம்பியர்மானியின் வாசிப்பு 1A ஆகும். மின்குமிழின் தடையை காண்க.

(C) சுகத கனிஷ்ட வித்தியாலத்தின் தரம் 11 மாணவர்களால் தன்னியக்கமாக ஒளிரும் ஒரு மின்விளக்குக்கான இலத்திரனியல் சுற்று படத்தில் காட்டப்பட்டுள்ளது.




(i) T எனும் எழுத்தால் குறிக்கப்பட்டுள்ள துணைக்கூறு யாது?

(ii) திரான்ஸிஸ்டர் P,Q,R முடிவிடங்களைப் பெயரிடு.

(iii) இச்சுற்றில் திரான்ஸிஸ்டரின் தொழிற்பாடு யாது?

9. (A) இரும்பு பிரித்தெடுக்கப்பயன்படும் ஊதுலையின் படம் கீழே தரப்பட்டுள்ளது.




(i) இங்கு தரப்படாத ஊதுலையின் மேற்பாகத்தால் சேர்க்கப்படும் மற்றைய மூலப்பொருள் எது?

(ii) ஊதுளையினுள் ஏமற்றைற்று தாழ்த்துவதற்கு பயன்படும் வாயு யாது?

(iii) ஊதுலையினுள் வெப்பநிலையை 1800°C வரை உயர்த்த அங்கு நிகழும் வெப்பப் பிரிகைத்தாக்கத்துக்கான சமப்படுத்தப்பட்ட இரசாயன சமன் பாட்டை தருக?

(iv) திரவ இரும்பின் மீது கழிவுகள் மிதப்பதால் உள்ள அனுகூலம் ஒன்று தருக?

(B)




சில அணுக்களின் நியமக் குறியீடுகள் மேலே தரப்பட்டுள்ளன. மேற்படி குறியீடுகளை மட்டும் பயன்படுத்தி கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக?


(i) சமதானிகளாக இருக்கக்கூடிய அணுக்கள் இரண்டும் எவை?

(ii) மூலகம் X ஆவர்த்தன அட்டவணையில் அமைந்துள்ள கூட்டம், ஆவர்த்தனம் என்பவற்றை ஒழுங்குமுறையில் தருக?

(iii) P,R,X என்பவற்றில் மின்னெதிர்த்தன்மை அதிகம் கொண்ட மூலகம் யாது?

(iv) மேற்படி மூலகங்களுள் குளிர் நீருடன் வேகமாக தாக்கமடையும் மூலகம் எது?

(C) இலேசான கோலொன்று சமநிலையில் இருக்கும் சந்தர்ப்பமொன்று கீழே தரப்பட்டுள்ளது.




(i) X எனும் பொருளின் திணிவு 100g. அதன் நிறை யாது? (g=10m5²)

(ii) இழைகள் திணிவற்றது, கப்பிகள் உராய்வற்றது எனக் கருத்திற் கொண்டு ஐதரசன் பலூனினால் ஏற்படுத்தும் விசை யாது?

(D) ஒரு மாணவன் a,b,c எனும் 3 வகையான ஆடிகளால் ஒரு பொருளை அருகாமையில் வைத்து அவதானித்தான் அவ் அவதானங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

A- பொருள் சிறியதாகவும் அருகிலும் காணப்படல்

B- பொருள் தூரத்துக்கு சமனான தூரத்தில் பொருள் அளவானதாக தென்படல்


C- பொருள் உருப்பெருத்ததாகக் காணப்படல்

(i) மேற்படி ஆடிகளில் குவிவாடியைக் குறிக்கும் ஆங்கில எழுத்து யாது?

(ii) ஆடி C யில் தென்படும் விம்பத்தின் இயல்புகளைக் கொண்ட விம்பத்தைப் பெற்றுத்தரக்கூடிய வில்லை வகை யாது?

(iii) சந்தர்ப்பம் C இற்குரிய கதிர்வரிப்படத்தை வரைக (இங்கு பொருள்ளை ↑ எனக் கொள்க.)

E. அலைகள் சக்தி ஊடுகடத்தப்படும் ஊடகத்தினூடாக அல்லது ஊடகம் இன்றி சக்தி ஊடுகடத்தற்படும்.




உ+ம் நீரலை ஒலியலை

(i) மேலே a,b அலை வகையை தருக.

(ii) மின்காந்த அலைவகைகள் சிலவற்றின் பயன்கள் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றுக்குப் பொருத்தமான அலைவகையை எழுதுக.

a) உணவு மற்றும் சத்திரசிகிச்சை உபகரணங்களை கிருமியழித்தல்

b) சேய்மை ஆளுமையால் தொலைக்காட்சிப் பெட்டி வரை

c) மனித உடலில் விற்றமின் D உற்பத்தி செய்தல்

d) ரேடார் தொகுதி, கையடக்கத்தொலைப்பேசி நுண்ணைக் கனலி என்பவற்றில் பயன்படல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருப்பெயர்ச்சிப் பலன்கள்

## 22.04.2023-01.05.2024

## இலாப நோக்கத்தோடு பழகியவர்களை இனங்கண்டு கொள்வீர்கள்!

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்





**எதையும் சமாளிக்கும் ஆற்றலைப் பெற்ற தனுசு இராசி வாசகர்களே!**

இதுவரை உங்கள் இராசிக்கு 4 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த குரு பகவான் 22.4.2023 முதல் 5 ஆம் இடத்தில் அடியெடுத்து வைக்கின்றார். அங்கிருந்து கொண்டு 9 ஆம் பார்வையாக உங்கள் இராசியைப் பார்க்கின்றார். "குரு பார்க்க கோடி நன்மை" என்பதற்கேற்ப இனி அடுக்கடுக்காக நன்மைகள் உங்களைத் தேடிவரப் போகின்றது. இல்லத்தில் சுபகாரியங்கள் கைகூடும். பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகள் கிடைக்கும். வழக்குகளும், வாய்த்தர்க்களும் வந்த வழியே திரும்பிச் செல்லும்.

**குரு இருக்கும் இடத்தின் பலன்!**

நவக்கிரகங்களில் சுபகிரகமாக விளங்கும் குருபகவான் உங்கள் இராசிநாதனாகவும், சுகாதிபதியாகவும் விளங்குபவர். அவர் 5 ஆம் இடத்தில் இருந்து கொண்டு 9 ஆம் பார்வையாக உங்கள் இராசியைப் பார்ப்பது யோகம் தான். குறிப்பாக பூர்வ புண்ணிய ஸ்தானத்திற்கு குரு பகவான் வரும்பொழுது பூர்வ புண்ணியத்தின் பலனாக கிடைக்க வேண்



டிய தெல்லாம் கிடைக்கும். ஐந்தினில் குருதான் வந்தால் அனைத்திலும் வெற்றிகிட்டும்! பைதனில் பணமும் சேரும்! பாராளும் யோகம் வாய்க்கும்! வையகம் போற்றும் வண்ணம் வாழ்க்கையும் அமையும் உண்மை! செய்தொழில் வளர்ச்சியாகும்! செல்வாக்கும் அதிகரிக்கும்! என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கின்றது. அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது 5 இல் குரு சஞ்சரிப்பதால் அடிப்படை வசதிகள் பெருகும். மதிப்பும், மரியாதையும் உயரும். மக்கள் மத்தியில் செல்வாக்கு அதிகரிக்கும். புதிய பொறுப்புகள் தேடிவரும்.

**வெற்றிகளைக் குவிக்கும் வியாழனின் பார்வை!**

இந்த குருப்பெயர்ச்சியின் விளைவாக குருபகவான் 1, 9, 11 ஆகிய மூன்று இடங்களையும் பார்க்கின்றார். குரு பார்வை பதியும் அந்த மூன்று இடங்களும் புனிதமடைகின்றன. ஜென்ம இராசியைக் குரு பார்ப்பதால் உடல்நலம் சீராகும். உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள். சுபகாரியப் பேச்சுக்கள் கைகூடும். அதிகாரப் பதவியில் உள்ளவர்களின் ஆதரவு கிடைக்கும். எதிரிகள் விலகுவர். லாப நோக்கத்தோடு பழகியவர்களை இனம் கண்டு கொள்வீர்கள். குருவின் பார்வை 9 ஆம் இடத்தில் பதிவதால் பொன், பொருள் சேர்க்கை ஏற்படும். புதிய பாதை புலப்படும். அன்பு நண்பர்கள் ஆதரவுக் கரம் நீட்டுவர். தந்தை வழி உறவில் இருந்த விரிசல் அகலும். சகோதரர்களுக்குள் இருந்த பிரச்சினைகள் படிப்படியாகத் தீரும். "ஐந்தும் ஒன்பதும் மிஞ்சும் பலன் தரும்" என்பதால் குருபகவான் ஐந்தாம் இடத்தில் இருந்து கொண்டு ஒன்பதாம் பார்வையாக உங்கள் இராசியைப் பார்ப்பதால் ஒளிமயமான வாழ்க்கைக்கு உத்திரவாதம் கிடைக்கப் போகின்றது. 11 ஆம் இடத்தைக் குரு பார்ப்பதால் லாப ஸ்தானம் புனிதமடைகின்றது. எனவே தொழிலில் எதிர்பார்த்ததைக் காட்டிலும் கூடுதல் லாபம் கிடைக்கும். அதுமட்டுமல்லாமல் வாடகைக் கட்டடத்தில் நடைபெற்ற தொழிலை சொந்தக் கட்டடத்திற்கு மாற்றும் முயற்சி கைகூடும். வெளிநாட்டிலுள்ள பிரபலமான நிறுவனங்களிலிருந்து அழைப்புகள் வரலாம். இளைய சகோதரத்தின் ஒத்துழைப்போடு நல்ல காரியங்களை செய்து முடிப்பீர்கள். இந்த நேரத்தில் அதைச் செய்வோமா, இதைச் செய்வோமா என்ற சிந்தனை உருவாகும். மித மிஞ்சிய பொருளாதாரம் ஏற்படும்.

**நட்சத்திரப் பாதசாரப்படி பலன்கள்!**

அசுவதி நட்சத்திரக்காலில் குருபகவான் சஞ்சரிக்கும் பொழுது, உங்கள் இராசி நாதன் குரு அசுவதி நட்சத்திரக்காலில் கேது சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது மங்கல நிகழ்ச்சிகள் மனையில் நடைபெறும். தொழில் சம்பந்தமாக எடுத்த முயற்சி கைகூடும். தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்க மாற்றினத்தவர்கள் உதவுவர். அரசு வழிச் சலுகைகள் எதிர்பார்த்தபடி கிடைக்கும். அலுவலகப் பணிகள் துரிதமாக நடைபெறும். கட்டடம் வாங்கும் முயற்சி கைகூடும். பிள்ளைகளின் கல்யாண காரியங்களை சிறப்பாக நடத்தி முடிப்பீர்கள். உத்தியோகத்தில் உங்கள் திறமைக்கு அங்கீகாரம் கிடைக்கும். உள்நாட்டில் மட்டுமின்றி வெளிநாட்டிலிருந்தும் அழைப்புகள் வரலாம். பரணி நட்சத்திரக்காலில் குருபகவான் சஞ்சரிக்கும் பொழுது, குருபகவான் பரணி நட்சத்திரக்காலில் [illegible] க்கும் பொழுது [illegible] இருக்கும். சுக்கிரன் உங்கள் இராசிக்கு 6, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியாவதால் பாடுபட்டதற்கேற்ற பலன் மட்டுமல்லாமல் உதிரி வருமானங்களும் உண்டு. வியாபாரம் வெற்றிநடை போடும். பொது வாழ்வில் உள்ளவர்களுக்கு மக்கள் செல்வாக்கு அதிகரிக்கும். தலைமைக்குத் தகுதியானவர்கள் என்று பொறுப்புகள் தேடி வரலாம். வழக்குகள் சாதகமாகும். உத்தியோகத்தில் உங்கள் கருத்துக்களை மேலதிகாரிகள் ஏற்றுக்கொள்வர். பழைய வாகனங்களைக் கொடுத்துவிட்டுப் புதிய வாகனங்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். பணி நீக்கம் செய்யப்பட்டவர்கள் உத்தியோகத்தில் மீண்டும் சேர வாய்ப்பு வரும். கவுரவம், அந்தஸ்து உயரும். கார்த்திகை நட்சத்திரக்காலில் குருபகவான் சஞ்சரிக்கும் பொழுது: குருப்பகவான் கார்த்திகை நட்சத்திரக்காலில் சூரிய சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது இனிய பலன்கள் ஏராளம் நடைபெறும். ஆன்மிகப் பெரியவர்களின் ஆசி உண்டு. பயணங்கள் பலன் தரும். வழக்குகள் வெற்றிப்பாதையை நோக்கிச் செல்லும். பிள்ளைகளால் ஏற்பட்ட பிரச்சினைகள் அகலும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு உயரதிகாரிகள் நெருக்கமாவர். விரயத்திற்கேற்ற வருமானமும் உண்டு. நீங்கள் சார்ந்துள்ள துறைகளில் முக்கிய விடயங்களை சிந்தித்து முடிவெடுக்க உகந்த நேரமிது. என்றைக்கோ வாங்கிப் போட்ட இடம் பல மடங்கு உயரும். எதிரிகள் இருந்த இடம் தெரியாமல் ஓடி ஒளிவர். ஈடுபடும் தொழில்கள் அனைத்திலும் வெற்றி கிடைக்கும்.

**ராகு- கேது பெயர்ச்சி!**

மேஷத்தில் குரு சஞ்சரிக்கும் காலத்தில் 8.10.2023 அன்று மீன இராசிக்கு ராகுவும், கன்னி இராசிக்கு கேதுவும் செல்கின்றார்கள். உங்கள் இராசிக்கு 4 ஆம் இடத்தில் ராகுவும், 10 ஆம் இடத்தில் கேதுவும் சஞ்சரிக்கப் போவதால் உடல்நலத்தில் கவனம் தேவை. உடனிருப்பவர்க்ளின் அனுசரிப்பு குறையும். சேமிப்புக் கரைகின்றதே என்று கவலைப்படுவீர்கள். நம்பிக்கைக்குரிய பணியாளர்கள் உங்களை விட்டு விலக நேரிடும். நல்ல சந்தர்ப்பங்கள் வந்தாலும் அதை உபயோகப்படுத்திக் கொள்ள இயலாது. உத்தியோகத்தில் உங்களுக்கு கிடைக்க வேண்டிய வெளிநாட்டு யோகம் [illegible]ளர்களுக்கு போய்ச் [illegible] போது குருவுடன் இணைந்த ராகு விலகி விட்டதால் குருவிற்கு கூடுதல் பலம் கிடைக்கும்.

குருவின் வக்கிர காலம்! (12.9.2023 முதல் 20.12.2023 வரை) இக்காலத்தில் குருபகவான் அசுவதி மற்றும் பரணி நட்சத்திரக்காலில் வக்கிரம் பெறுகின்றார். உங்கள் இராசிக்கு அதிபதியாகவும், 4 ஆம் இடத்திற்கு அதிபதியாகவும் விளங்கும் குருபகவான் வக்கிரம் பெறும்பொழுது ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கும். குடும்பத்தில் யாரேனும் ஒருவர் மாற்றி ஒருவருக்கு வைத்தியச் செலவு மிகுதியாகும். யாருக்கேனும் பணப்பொறுப்பு சொல்வ தென்றால் யோசித்துச் சொல்லுங்கள். உத்தியோகத்தில் கூட உங்களிடம் கொடுக்கப்பட்ட பொறுப்புகளை யாரிடமும் கொடுக்கக்கூடாது. பொருளாதார நிலை சரிவு நிலைக்கு வந்து பிறகு சகஜ நிலைக்கு மாறும். தொழில், உத்தியோகம் பற்றிய தகவல்களையோ, உங்கள் முன்னேற்றம் பற்றியோ யாரிடமும் விமர்சித்துப் பேச வேண்டாம்.

**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!**

தனுசு இராசியில் பிறந்த பெண்ளுக்குத் தடைகள் அனைத்தும் விலகும். தனவரவு திருப்திகரமாக இருக்கும். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். உங்கள் பெயரிலேயே இடம், பூமி வாங்கும் யோகம் உண்டு. உடன்பிறந்தவர்கள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். பிள்ளைகளின் திருமணம் போன்ற சுபகாரியங்கள் திருப்தியாக நடைபெறும். மூதாதையர்களின் சொத்துக்களில் இருந்த வில்லங்கங்கள் விலகும். இல்லத்துப் பூஜையறையில் குரு தட்சிணாமூர்த்தி படம் வைத்து குரு கவசம் பாடி வழிபடுவது நல்லது. பணிபுரியும் பெண்களுக்கு உத்தியோக உயர்வு, ஊதிய உயர்வு கிடைக்கும்.

**செல்வ வளம் தரும் சிறப்பு வழிபாடு!**

இல்லத்து பூஜையறையில் குரு பகவான் படம் வைத்து முல்லைபூ மாலை சூட்டி குரு கவசம் பாடி வழிபடுவது நல்லது. மேலும் தேய் பிறை அஷ்டமி திதியில் வைரவரை வழிபடுவதன் மூலம் வளர்ச்சி கூடும். வருமானம் திருப்தி தரும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



## கல்கியின் பாகம் - 1
# பொன்னியின் செல்வன்
### காவியத் தொடர் 170



"விரதம் என்றும், நோன்பு என்றும் சொல்லி என்னை ஒதுக்கியே வைத்துக் கொண்டிருக்கிறாய். கரம் பிடித்து மணந்து கொண்ட கணவனை வாட்டி வதைக்கிறாய்! அல்லது ஒரு வழியாக எனக்கு உன் கையினால் விஷத்தைக் கொடுத்துக் கொன்று விடு!"

நந்தினி தன் செவிகளைப் பொத்திக் கொண்டு, "ஐயையோ! இம்மாதிரி கொடிய வார்த்தைகளைச் சொல்லாதீர்கள்! இன்னொரு முறை இப்படிச் சொன்னால், நீங்கள் சொல்லுகிறபடியே செய்துவிடுவேன். விஷத்தைக் குடித்துச் செத்துப் போவேன். அப்புறம் தாங்கள் கவலையற்று நிம்மதியாக இருக்கலாம்!" என்றாள்.

"இல்லை, இல்லை இனி அப்படிச் சொல்லவில்லை. என்னை மன்னித்து விடு! நீ விஷங்குடித்து இறந்தால் எனக்கு மன நிம்மதி உண்டாகுமா? இப்போது அரைப் பைத்தியமாயிருக்கிறேன் அப்போது முழுப் பைத்தியமாகி விடுவேன்!"

"நாதா! எதற்காகத் தாங்கள் பைத்தியமாக வேண்டும்? என்றைக்கு நாம் கைப்பிடித்து மணந்து கொண்டோமோ, அன்றைக்கே நாம் இரண்டு உடம்பும் ஓர் உயிரும் ஆகி விட்டோம். உயிரும் உயிரும் கலந்து விட்டன உள்ளமும் உள்ளமும் சேர்ந்து விட்டன தங்கள் இதயத்தின் ஒவ்வொரு துடிப்பும் இங்கே என் இதயத்தில் எதிரொலியை உண்டாக்குகிறது. தங்கள் நெஞ்சில் உதிக்கும் ஒவ்வொரு எண்ணமும் இங்கே என் அகக் கண்ணாடியில் பிரதிபலிக்கிறது. தங்கள் புருவம் நெரிந்தால் என் கண் கலங்குகிறது. தங்கள் மீசை துடித்தால் என் குடல் துடிக்கிறது. இப்படி நாம் உயிர்க்குயிரான பிறகு, கேவலம் இந்த உடலைப் பற்றி ஏன் சிந்தனை? மண்ணினால் ஆன உடம்பு இது ஒரு நாள் எரிந்து சாம்பலாகி மண்ணோடு மண் ஆகபோகிற உடம்பு இது!"

"நிறுத்து! நிறுத்து! உன் கொடுமையான வார்த்தைகளைக் கேட்டு என் காது கொப்புளிக்கிறது!" என்று பழுவேட்டரையர் அலறினார். மேலும் அவள் பேச இடங்கொடாமல் பேசினார்: "மண்ணினால் ஆன உடம்பு என்றா சொன்னாய்? பொய்! பொய்! தேன் மணம் கமழும் உன் கனி வாயினால் அத்தகைய பெரும் பொய்யைச் சொல்லாதே! உன் உடம்பை மண்ணினால் செய்ததாகவா சொன்னாய்? ஒருநாளும் இல்லை. உலகில் எத்தனையோ பெண்கள் இருக்கிறார்கள். அவர்களையெல்லாம் பிரமதேவன் மண்ணினாலும் செய்திருக்கலாம், கல்லினாலும் செய்திருக்கலாம். கரியையும் சாம்பரையும் கலந்து செய்திருக்கலாம். ஆனால் உன்னுடைய திருமேனியைப் பிரம்மா எப்படிச் செய்தான் தெரியுமா? தேவலோகத்து மந்தார மரங்களிலிருந்து உதிர்ந்த மலர்களைச் சேகரித்தான் தமிழகத்துக்கு வந்து செந்தாமரை மலர்களைப் பறித்துச் சேகரித்தான் சேகரித்த மலர்களைத் தேவலோகத்தில் தேவாமிர்தம் வைத்திருக்கும் தங்கக் கலசத்தில் போட்டான்.

அமுதமும் மலர்களும் ஊறிக் கலந்து ஒரே குழம்பான பிறகு எடுத்தான். அந்தக் குழம்பில் வெண்ணிலாக் கிரணங்களை ஊட்டினான். பண்டைத் தமிழகத்துப் பாணர்களை அழைத்து வந்து யாழ் வாசிக்கச் சொன்னான். அந்த யாழின் இசையையும் கலந்தான். அப்படி ஏற்பட்ட அற்புதமான கலவையினால் உன் திருமேனியைப் படைத்தான் பிரம்மதேவன்."

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## நண்டு, கொக்கைக் கொன்ற கதை

ஒரு குளக்கரை. கரையோரத்தில் கிழக்கொக்கு ஒன்று விசனமுடன் ஒற்றைக் காலில் நின்று கொண்டிருந்தது. துள்ளிக் கொண்டிருந்த மீன்களில் ஒன்றுக்கு சந்தேகம் வந்தது.

"நம்மைச் சும்மா விடாதே, ஆனால் செயலற்று நின்றுள்ளதே என்னவாக இருக்கும்" என்று. "நமக்கேன்" என்று இராமல் அதன்முன் வந்தது. "என்ன கொக்காரே! உன் ஆகாரத்தைக் கொத்தாமல் சும்மா நிற்கிறீர்?" என்றது.

"நான் மீனைக் கொத்தித் தின்பவன் தான், ஆனாலும் இன்று எனக்கு மனசு சரி இல்லை" என்றது கொக்கு. "மனசு சரி இல்லையா! ஏன்?' என்றது மீன்.



"அதை ஏன் கேட்கிறாய்" என்று பிகு பண்ணியது கொக்கு. "பரவாயில்லை சொல்லுங்களேன்" "சொன்னால் உனக்குத் திக் என்றாகும்." மீனுக்குப் பரபரத்தது.

"சொன்னால் தானே தெரியும்" "வற்புறுத்திக் கேட்பதாலே சொல்கிறேன். இப்போது ஒரு செம்படவன் இங்கே வரப்போகிறானாம்" என்று இழுத்தது கொக்கு. "வரட்டுமே" "என்ன வரட்டுமே? உங்களையெல்லாம் ஒட்டுமொத்தமாகப் பிடித்துச் சென்றுவிடப் போகிறான்." "அய்யய்யோ!" உடனே அம்மீன் உள்ளே சென்றுவிட்டது.

சில நிமிடங்கள் ஆகி இருக்கும் பல மீன்கள் அதன்முன் துள்ளின. அதுமட்டுமா! ஒட்டு மொத்தமாக "நீயே எங்களையெல்லாம் அந்த அபாயத்திலிருந்து கர்ப்பாற்றேன்" என்று கெஞ்சின.

அபாயம் சொன்னவனே உபாயமும் சொல்வான் என்று அவைகள் யோசித்து கொக்கிடம் உதவி கேட்டன. "நான் ஏன்ன செய்வேன்? என்னால் செம்படவனோடு சண்டை போட முடியாது. கிழவன் நான். வேண்டுமென்றால் உங்களை இக்குளத்திலிருந்து வேறொரு குளத்துக்குக் கொண்டு போகலாம்.

அதனால் எனக்கும் இந்தத் தள்ளாத வயதில் பரோபகாரி என்ற பெயரும் வரும் நீங்களும் பிழைத்திருப்பீர்கள்" என்றது கொக்கு மிகவும் இரக்கம் கசிய. மீன்கள் எல்லாம் தம் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள அதன் பேச்சை நம்பின.

"அபாயத்தை அறிந்து சொன்ன நீங்களே உபாயத்தையும் தெரிந்து சொல்கிறீர்கள் அப்படியே செய்யுங்கள்" என்றன ஒரு மித்தக் குரலில்.

கொக்குக்கும் கசக்குமா காரியம்? நடைக்கு ஒவ்வொன்றாக குளத்திலிருந்த மீன்களையெல்லாம் கௌவிக் கொண்டு போய் சில மீன்களைத் தின்று, மற்ற மீன்களை ஒரு பாறையில் உலர வைத்தது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு மனிதனுடைய இலட்சியம் என்னவென்று அறிந்து கொண்டால் போதும். அதனைக் கொண்டே அவனை அறிந்து கொள்ளலாம்.
– ஹோம்ஸ்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## நம்பமுடியாதவர்களாக நம் அரசியல்வாதிகள்...

ஒரு காலத்தில் நம் தமிழ் இனத்தில் அரசியல் என்பதற்குத் தனிமதிப்பு இருந்தது.

அந்தளவுக்கு தமிழ் அரசியல்வாதிகள் நேர்மை உள்ளவர்களாக, சுயலாபம் கருதாதவர்களாக, மக்களின் கஷ்டங்களை உணர்ந்தவர்களாக இருந்தனர்.

இதனால் தமிழ் அரசியல்வாதிகளுக்கு மக்கள் தனித்துவமான கௌரவத்தைக் கொடுத்தனர்.

அரசியல்வாதிகளைக் கண்டால் அவர்களுக்கு உரிய மதிப்பு வழங்கப்பட்டது.

அரசியல் மேடைகளில் பேசுகின்ற அரசியல் பேச்சாளர்களின் பேச்சைக் கேட்பதில் மக்கள் ஆர்வம் காட்டினர்.

தங்களின் கொள்கையுடன் இணங்கிப் போகின்ற அரசியல்வாதிகளை ஆதரிப்பதிலும் தமிழ் மக்கள் மிகுந்த ஆர்வம் காட்டினர்.

இதனால் அரசியல் கூட்டங்களில் கட்சி பேதமின்றி மக்கள் கூடினர்.

அதேபோல அன்றைய தமிழ் அரசியல்வாதிகளும் தங்களின் சொத்துக்களை தமிழ் மக்களுக்காக ஈந்தளித்தனர். பொதுமக்களுடன் சிறப்பான தொடர்பாடலைப் பேணினர்.

ஆனால் இன்று நிலைமை அதுவல்ல. தமிழ் அரசியல்வாதிகளில் யாரை நம்புவது யாரை நம்பாமல் விடுவது என்பது தெரியாமல் மக்கள் குழம்பிப் போயுள்ளனர்.

எதிலும் அரசியல் இலாபத்தை அடிப்படையாகக் கொண்ட தமிழ் அரசியல்வாதிகளின் போக்கினால் மக்கள் வெறுப்படைந்துள்ளனர்.

இதனால் அரசியல்வாதிகள் என்றாலே அவர்கள் நேர்மையற்றவர்கள். கூசாமல் பொய்யுரைப்பவர்கள். இங்கொன்றும் அங்கொன்றுமாகக் கதைப்பவர்கள். தங்களின் சுயலாபத்திலேயே கண்ணும் கருத்துமாக இருப்பவர்கள் என்ற எண்ணக்கரு ஒட்டுமொத்த தமிழ் மக்களிடமும் ஏற்பட்டுவிட்டது.

இதன் காரணமாக பொது நிகழ்வுகளில் கூட, அரசியல்வாதிகள் தவிர்க்கப்பட வேண்டியவர்கள் என்பதாக மக்களின் மனநிலை வந்துவிட்டது.

அதேநேரம் நேர்மையானவர்கள் அரசியலுக்கு வரமாட்டார்கள் என்ற மக்களின் கருத்தியலால், தமிழ் அரசியல் தரமானவர்களைப் பெற்றுக் கொள்ள முடியாமல் திண்டாடுகிறது.

ஆம், சமகாலத்து அரசியல்வாதிகளின் செயற்பாடுகள் குறித்து தமிழ் மக்கள் மிகத் துலாம்பரமாக ஆராய்கின்றனர்.

நடுநிலை நின்று ஆராய்கின்ற கனவான்களின் முடிவு; அரசியல் என்பது சாக்கடை. அந்த அரசியலில் தாங்களோ அன்றி தங்களின் பிள்ளைகளோ ஈடுபடலாகாது என்பதாக இருக்கிறது.

தவிர, அரசியல்வாதிகள் என்றாலே இயல்பான வெறுப்பும் கோபமும் மக்களிடம் ஏற்பட்டுவிட்டது.

இதனால் அரசியல் கூட்டங்கள், அரசியல் நிலைப்பாடுகள், விமர்சனங்கள் என அனைத்தையும் தமிழ் மக்கள் புறந்தள்ளிவிட்டனர்.

எனவே இந்த மிகமோசமான நிலைமையை மாற்றியமைக்க வேண்டிய பொறுப்பு தங்களிடம் மட்டுமே உண்டென்பதை தமிழ் அரசியல்வாதிகள் புரிந்து கொண்டு செயற்பட வேண்டும். இல்லையேல் நிலைமை படுமோசமாகும்.

## தமிழ்க் கட்சிகள்-ஜனாதிபதி சந்திப்பில் வடக்கு ஆளுநரும் பங்கேற்பார்

### அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு

தமிழ்க் கட்சிகளுக்கும் ஜனாதிபதிக்கும் இடையே இடம்பெறும் சந்திப்பில் வட மாகாண ஆளுநரும் பங்கேற்கிறார் என யாழ். மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் அமைச்சருமான டக்ளஸ்தேவானந்தா தெரிவித்தார்.

நேற்று வியாழக்கிழமை யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற மாவட்ட அபிவிருத்திக் கலந்துரையாடலின் தொடக்க உரையை ஆற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டின் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமிழ் மக்களுடைய அரசியல் தீர்வு விடயத்தில் கரிசனையாக உள்ளார். எதிர் வரும் வாரங்களில் தமிழ்க் கட்சிகளுக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் தமிழ் மக்களின் அரசியல் தீர்வு விடயங்கள் தொடர்பில் விரிவாக கலந்துரையாடப்படவுள்ளது.

தமிழ் மக்களின் அரசியல் தீர்வு விடயங்களில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் காலத்தில் சரியான ஒரு தீர்வை எட்டலாம் என நான் நினைக்கிறேன். ஜனாதிபதியின் தீர்வை நோக்கிய செயற்பாடுகளுக்கு தமிழ்க் கட்சிகளும் தமிழ் மக்களும் ஒத்துழைப்பை வழங்குவதோடு ஆலோசனையையும் வழங்க முடியும்.

அது மட்டுமல்லாது வட பகுதி அபிவிருத்திக்கு விசேட நிதி ஒதுக்குவது தொடர்பில் ஜனாதிபதி விரும்பும் நிலையில் அதற்கான சரியான திட்டங்கள் தொடர்பிலும் கலந்துரையாட உள்ளோம்.

ஆகவே ஜனாதிபதிக்கும் தமிழக் கட்சிகளுக்கும் இடையிலான கலந்துரையாடல் திட்டமிட்டபடி இடம் பெற உள்ளதோடு வட மாகாண ஆளுநரும் பங்கேற்கிறார் என அவர் தெரிவித்தார். (ம-7,9,33,104)

## திருகோணமலை நீதிமன்றில் சந்தேக நபர் ஒருவர் உயிர் மாய்க்க முயற்சி

(திருகோணமலை)

திருகோணமலை நீதிமன்றில் எதிரிக்கூண்டில் ஏறிய சந்தேக நபரொருவர் உயிர்மாய்க்க முயற்சித்த சம்பமொன்று நேற்று திருகோணமலை நீதிமன்றில் பதிவாகியுள்ளது.

சட்டவிரோத ஹெரோயின் போதைப்பொருள் விற்பனை செய்த குற்றச்சாட்டின் பேரில் திருகோணமலை நீதவான் நீதிமன்றில் எதிரிக் கூண்டில் முற்படுத்தப்பட்டபோது நீதவானுக்கு முன்னால் தன்வசம் வைத்திருந்த பிக்ரேசரினால் கழுத்தை அறுத்துள்ளதாக தெரியவருகின்றது.

திருகோணமலை-சீனக்குடா பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கப்பல் துறையைச்சேர்ந்த யோகதாசன் லக்ஸன் வயது (25) என்பவரே உயிர் மாய்க்க முயற்சித்துள்ளதாக ஆரம்ப கட்ட விசாரணை மூலம் தெரியவந்துள்ளது.

சட்டவிரோத ஹெரோயின் போதைப்பொருளை வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் திருகோணமலை நீதவான் நீதிமன்று 2ல் முற்படுத்தப்பட்டபோது எதிரிக் கூண்டில் நின்ற நிலையிலேயே தனது கைவசம் மறைத்து வைத்திருந்த பிக்ரேசரை பாவித்து கழுத்தை அறுத்து உயிர் மாய்க்க முயற்சிக்க முற்பட்டுள்ளார்.

இவர் தெய்வாதீனமாக உயிர் தப்பிய நிலையில் கழுத்தில் இரு காயங்களுடன் திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (ம-7,9)

## காப்புறுதிப் பணம் பெறுவதற்காக மனைவியை கொலை செய்த இளம் குடும்பஸ்தர் கைது

(கொழும்பு)

ஆயுள் காப்புறுதிப் பணத்தை பெற்றுக் கொள்வதற்காக மனைவியைக் கொன்ற குற்றச்சாட்டில் நபரொருவரை பிடிகல பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட 24 வயதுடைய குறித்த இளம் குடும்பஸ்தர் தனது நண்பருக்கு 20 இலட்சம் ரூபாவையும் வாடகை வாகனம் ஒன்றையும் கொடுத்து விபத்தை ஏற்படுத்தி தனது மனைவியை கொலை செய்துள்ளமை விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளதாக பிடிகல பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த ஏப்ரல் 30ஆம் திகதி எல்பிட்டிய, பிடிகல - மாபலகம பிரதேசத்தில் 40 வயதுடைய பெண் ஒருவர் விபத்தில் சிக்கி ஸ்தலத்திலேயே உயிரிழந்தார். அவரை விபத்துக்குள்ளாக்கிய ஜீப் ரக வாகனம் சம்பவம் இடத்திலிருந்து தப்பிச் சென்றிருந்தது.

இது குறித்து எல்பிட்டிய பிரிவுக்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டு சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

உயிரிழந்த பெண் ஆடைத் தொழிற்சாலை யொன்றின் ஊழியர் என்றும் அவர் 4 நிறுவனங்களிடம் 50 இலட்சம் ரூபாவுக்கு ஆயுள் காப்பீடு எடுத்துள்ளார் என்றும் தெரியவந்துள்ளது. இந்த நிலையில் மனைவியை கொலை செய்து அதனை விபத்து என காப்புறுதி நிறுவனங்களிடம் நிரூபித்து ஆய்ள்காப்பீடு களை பெறுவதற்கு சந்தேகநபர் திட்டமிட்டுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தநிலையில் கைது செய்யப்பட்ட 24 வயதுடைய சந்தேக நபர் காலி பிரதேசத்தில் வசிக்கும் வேலையற்ற இளைஞரொருவரென பொலிஸார் தெரிவித்தனர். (ம-7,9)

## பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் பஸிலாகக்கூட இருக்கலாம்

### சாகர காரியவசம்

(கொழும்பு)

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி வேட்பாளரை ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சி களமிறக்கும். அந்த வேட்பாளர் பஸில் ராஜபக்ஷவாகக் கூட இருக்கலாம் என்று ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

மொட்டுக் கட்சி தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின் போது ஜனாதிபதித் தேர்தல் சம்பந்தமாக எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஜனாதிபதித் தேர்தலுக்கு இன்னும் ஒரு வருடமும் நான்கு மாதங்களும் உள்ளன. எனவே உரிய நேரத்தில் வெற்றி வேட்பாளரை எமது கட்சி பெயரிட்டு அறிவிக்கும். அந்த வேட்பாளர் பஸில் ராஜபக்ஷவாகக்கூட இருக்கலாம். நாட்டின் தேவை கருதியே ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் எமது கட்சி முடிவெடுக்கும் என்றார். (ம-7,9)

## மன்னாரில் நிதி மோசடி யாழைச் சேர்ந்த இருவர் கைதாகி பிணையில் விடுதலை

மன்னாரில் 6 இலட்சம் ரூபா நிதி மோசடி செய்த பெண்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கட்டாரில் வேலை வாய்ப்புக்களை பெற்றுத் தருவதாக கூறி நிதி மோசடியில் குறித்த பெண்கள் ஈடுபட்டுள்ளனர்.

இது தொடர்பில் மன்னார் பொலிஸில் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் குறித்த பெண்கள் [illegible] ஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்கள் 23 மற்றும் 42 வயதுடைய யாழ்ப்பாணம் ஊர்காவற்துறையை சேர்ந்தவர்களாவர்.

சந்தேகநபர்கள் நேற்று முன்தினம் மன்னார் நீதவான் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டதன் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். இது தொடர்பான விசாரணைகளை [illegible] பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,9)

## போலி நாணயத்தாள்களுடன் ஆனையிறவில் இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவுப் பகுதியில் பெருந்தொகையான போலி நாணயத்தாள்களுடன் இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஆனையிறவு சோதனைச் சாவடியில் வைத்து சோதனையிடும் போது யாழ்ப்பாணத்தில் இருந்து பயணித்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதோடு அவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். (ம-7,9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீன் பிடித்தொழில் வரலாறு

## தொகுப்பு- I

04

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.






### பறிக்கூடு

பறிக்கூடுகள் ஈர்க்கிள், சிறிய மூங்கில் போன்றவற்றினால் வடிவமைக்கப்படுகின்றன (படம்-6). பொறிகள் போன்று அமைக்கப்படும் கூடுகள் மீன்கள் உள்ளே இலகுவாகச் செல்லவும் வெளியில் இலகுவாக திரும்பிச் செல்லாதவாறும் ஆக்கப்படுகின்றன.

பறிக்கூடுகள் ஆழமற்ற கடலில் மீன்களுக்கு ஒரு மறைவிடமாகத் தெரிவதால், அவை அவற்றுள் புகுந்து கொள்கின்றன. ஆழம் குறைவான கடற்பரப்பிலும் ஏரிப் பகுதிகளிலும் நீளத்திற்கு 25 தொடக்கம் 50 கூடுகள் வரையில் வள்ளத்தில் ஏற்றிச் சென்று நீரின் அடித்தளத்தில் சில இடக் குறிப்புகளுடன் துணையுடன் போட்டு விடப்படுகின்றன. பறிகூடுகள் ஒல்லித் தேங்காய்களுடன் கயிற்றில் பிணைக்கப்பட்டு இடப்படுவதும் உண்டு.

இதனுள் பழுதடைந்த மீன்கள், திருக்கைக் குடல்கள், மிருக இறைச்சிகளின் கழிவுகள் போன்றன இரையாக வைக்கப்படுகின்றன. இதன் மூலம் நண்டு, மீன்கள் போன்றவை பிடிக்கப்படுகின்றன.

பொதுவாக மீனவர்கள் பறிக்கூடுகளை கரையிலிருந்து ஒரு கிலோமீற்றர் அளவான துாரத்தில் கொண்டு சென்று அங்குள்ள முருகை, சல்லி, பார் என்று அழைக்கப்படும் பவளப் பாறைகளுக்கு, டையில் வைத்துவிடுவர்.





அடுத்த நாள் வெய்யில் நன்றாக எறித்தபின், பறிக்கூடுகளைமரக் கோலின் கொக்கியால் தோணிக்குள் எடுப்பார். மீன்களை பறிகளிலிருந்து எடுத்து விட்டு மறுபடியும் அதே இடத்தில் வைத்து விட்டு வீடு திரும்புவார்.

சில நேரங்களில் பறிக்கூடுகள் கடலுடன் அள்ளுபட்டுச் சென்று விடும். பறிகூடுகளின் அளவு, வடிவம் என்பன நாட்டுக்கு நாடு வேறுபடுகின்றன.

### வலைக்கூடு

கம்பி அல்லது மூற்கில் வளையங்களில் பொருத்தப்பட்ட சிறிய பை போன்ற மடியே வலைக் கூடாகும் (படம்-7). கீழ்ப்பகுதியில் பாரமும் வளையத்தில் மேற்பகுதியில் முக்கோண வடிவத்தில் கயிறுகளும் இணைக்கப்பட்டிருக்கும். இக்கூடுகள் நிலத்தின் அடிப்பகுதியில் இருக்கும் வண்ணம் நீரினுள் அமிழ்த்தி விடப்பட்டு கைக்கயிறு ஒன்று மேற்பரப்பு வரை மிதவையில் (படகில்) இணைக்கப்படுகின்றது.




வளையத்தின் மேற்பகுதியில் உள்ள முக்கோண கயிற்றில் பழுதடைந்த மீன், சிறிய கணவாய், இறால் போன்றன இரையாக தொங்கவிடப்படுகின்றன.

அடித்தளம் கற்பார் கொண்ட பகுதிகளில் வைக்கப்படுகின்றன. குறிப்பிட்ட சில மணி நேரத்தின் பின்னர் கைக்கயிற்றைத் துாக்குவதன் மூலம் இரையை சாப்பிட வரும் மீன்களும் நண்டுகளும் சிறிய மடிப்பகுதிக்குள் அகப்பட்டுக் கொள்கின்றன. மட்டக்களப்பின் ஏரிப்பகுதிகளில் இது ஒரு பிரபல்யம் வாய்ந்த ஒரு முறையாக காணப்படுகின்றது.


### மீன் கிளை

மீன் பிடித்தலின் போது புராதனந் தொட்டே இம்முறை (படம்-8) கையாளப்படுகிறது.


நீர்கொழும்புக் கடனேரியில் இம் முறை அதிக அளவில் காணப்படுகிறது. கடனேரியில் ஆழம் குறைந்த இடங்களே இதன் நிமித்தம் தேர்ந்தெடுக்கப்படும்.

கண்டல கிளைகள் தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களில் வைக்கப்படும். இவ்விதம் வைக்கப்படும் பட்சத்தில் அயலில் நடமாடும் மீன்கள் மேற்படி கிளைகள் உள்ள இடங்களை நாடிவந்து திரண்டு விடும். சில தினங்களின் பின்னர் அக்கிளைகளை உள்ளடக்கி அப் பகுதி ஒரு வலையால் வளைக்கப்படும்.

அதனை அடுத்து வலையினுள் காணப்படும் கிளைகள் அகற்றப்படும். பின்னர் படிப்படியாக வலையை ஒன்று சேர்த்து அடைப்புக்குள் உள்ள மீன்களைப் பிடிப்பார்கள், சில சந்தர்ப்பங்களில் மேற்படி கிளைகள் இடம் பெயராது இருப்பதற்காகக் கிளைகளுக்கு மத்தியில் கம்புகள் ஊன்றப்படுவதும் உண்டு. கடனேரிகளில் உள்ள இறால்களையும் சிறிய மீன்களையும் பிடிப்பதற்காக இம் முறை கையாளப்படுகிறது.


படம்-6 பறிக்கூடு



படம்-7 வலைக்கூடு

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தையிட்டியில்...

துள்ளது.

தையிட்டி விகாரையை அகற்றுமாறு கோரி போராட்டம் நேற்றுமுன்தினம் தொடக்கம் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் நேற்று வியாழக்கிழமை பெண்ணொருவர் உள்ளிட்ட ஐவரை பலாலி பொலிஸார் கைது செய்திருந்தனர்.

கைது செய்யப்பட்ட ஐவரையும் மல்லாகம் நீதவான் நீதிமன்றில் பொலிஸார் முற்படுத்தியதை அடுத்து நடைபெற்ற விசாரணைகளை தொடர்ந்து அவர்கள் ஐவரையும் தலா ஒரு இலட்சம் ரூபாய் சரீரப் பிணையில் செல்ல மன்று அனுமதித்ததுடன் வழக்கினை எதிர்வரும் 11ஆம் திகதிக்கு மன்று திகதியிட்டுள்ளது. (ம-7,9,33)

## அமைதியாகப்...

வர்கள் வெளியே வர முடியாத நிலை காணப்பட்டது.

அந்தவகையில் உணவுகளோ மருந்துப் பொருட்களோ உள்ளே உள்ளவர்களுக்கு வழங்க முடியாத நிலை ஏற்பட்டது.

அதனையடுத்து நேற்றுக். காலை மருந்துப் பொருட்கள் மற்றும் உணவுப் பொருட்களை உள்ளே கொண்டு செல்ல முயற்சித்த ஐவரை பலாலி பொலிஸார் கைது செய்து மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்தினர்.

இந்நிலையில் கைது செய்யப்பட்டவர்களுக்காக சட்டத்தரணி சுகாஷ் நீதிமன்றத்தில் ஆஜரானார். இதன் போது அவர்கள் ஐவரையும் மல்லாகம் நீதிமன்றம் பிணையில் விடுவித்தது.

பின்னர் மல்லாகம் நீதிமன்ற நீதிவான் சம்பவ இடத்திற்கு வருகை தந்து நிலைமையை ஆராய்ந்தார். அதன்பின்னர் விகாரைக்கு முன்னால் உள்ள காணியில் அமைதியான முறையில் போராட்டத்தில் ஈடுபடலாம், வெசாக் தினத்துக்கு வழிபாடு செய்வதற்கு வருபவர்களுக்கு இடையூறு ஏற்படுத்தக்கூடாது என்று கூறினார்.

அதன்பின்னர் வீதி மறியலுக்கு வெளியே இருந்து போராடியவர்கள் வீதி மறியலுக்கு உள்ளே சென்று அமைதி வழிப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7,9,104)

## நீதவான்...

வலி.வடக்கு தையிட்டி விகாரை அமைந்துள்ள பகுதிக்கு மல்லாகம் நீதவான் காயத்திரி நேற்று கள விஜயம் மேற்கொண்டு நிலைமைகளை ஆராய்ந்தார். (ம-7,9,33)

## வழிபாட்டுக்கோ...

உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் உள்ளிட்ட ஐவரின் பெயர்கள் குறிப்பிட்டு மல்லாகம் நீதவான் நீதிமன்று கட்டளை வழங்கியுள்ளது.

குறித்த கட்டளையில்,

ஒவ்வொருவரும் அமைதிக்கு பங்கம் விளைவிக்காத வகையில் செயற்பட வேண்டும். விகாரையின் முகப்பிலேயோ, பாதையிலேயோ தடைகளை ஏற்படுத்தக்கூடாது. விகாரை வழிபாட்டிற்கு வரும் மக்களுக்கோ, விகாரையில் நடைபெறும் உற்சவங்களுக்கோ, இடையூறு ஏற்படுத்த கூடாது என நீதிமன்று கட்டளையாக்கியுள்ளது.

அதேவேளை திறந்தவர்களது உரித்து ஏதேனும் பாதிக்கப்பட்டு இருப்பின், உரிய நீதிமன்றில் உரிய வழக்கொன்றை தாக்கல் செய்து, உரிய நிவாரணத்தை பெற்றுக்கொள்ள முடியும் எனவும்மன்று அறிவுறுத்தியுள்ளது.

அத்துடன் குறித்த வழக்கு எதிர்வரும் 11ஆம் திகதி மன்றில் விசாரணைக்கு எடுத்து கொள்ளப்படும் என மன்று திகதியிட்டு உள்ளது. (ம-7,9,33.104)

## யாழ்.மாவட்ட...

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தை கண்டித்து தையிட்டியில் இடம்பெற்ற விகாரை அமைப்புக்கு எதிரான போராட்டத்தில் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

தையிட்டி விகாரைக்கு எதிர்ப்பு தெரிவித்தும், விகாரையை அகற்ற கோரி போராட்டத்தில் ஈடுபட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர் செ. கஜேந்திரன் உள்ளிட்டவர்களை பொலிஸார் முற்றுகையிட்டுள்ளதையும் கண்டித்து, ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் இருந்து பாராளுமன்ற உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்.

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டம் நேற்று வியாழக்கிழமை கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா மற்றும் மாவட்ட அரச அதிபர் ஆகியோரின் இணைத்தலைமையில் நடைபெற்றது.

அதன்போது கூட்டத்தில் பங்குபற்றிய தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான, எம்.ஏ.சுமந்திரன், சி.சிறீதரன், த.சித்தார்த்தன் மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் ஆகியோரும் வடமாகாண அவைத்தலைவர் சி.வி.கே. சிவஞானம் உள்ளிட்டோர் கூட்டத்தில் இருந்து வெளிநடப்பு செய்து போராட்டக்களம் சென்றனர்.

மேலும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜாவும் போராட்டக்களம் சென்று தமது ஆதரவை வழங்கினார். (ம-7,9,33,104)

## தையிட்டியில் இன்று...

கின்றது.

இப்போராட்டத்தை தடைசெய்வதற்கான உத்தரவினைக்கோரி நீதிமன்றுக்கு சென்ற பொலிஸார் நீதிமன்றில் பொய்களைக் கூறி நீதிமன்றத்தை தவறாக வழிநடத்தி தடையுத்தரவைப் பெற முயன்றனர். எனினும் தையிட்டி மக்கள் சார்பில் மல்லாகம் நீதவான் நீதிம்ன்றில் முன்னிலையாகிய சிரேஷ்ட சட்டத்தரணி க.சுகாஷ் மற்றும் சட்டத்தரணி க.மகிந்தன் ஆகியோர் மக்கள் தரப்பு நியாயங்களை முன்வைத்ததன் அடிப்படையில் மதிப்பிற்குரிய மல்லாகம் நீதவான் நீதிமன்ற நீதிபதி குறித்த போராட்டம் நடைபெற்ற இடத்திற்கு நேரில் விஜயம் செய்திருந்தார். விகாரையின் முகப்பிலோ, அல்லது பாதையிலோ தடைகளை ஏற்படுத்தாது, வழிபாட்டிற்கு வரும் மக்களுக்கோ, விகாரையில் இடம்பெறும் உற்சவத்திற்கோ இடையூறு ஏற்படுத்தாமலும், அமைதிக்குப் பங்கம் விளைவிக்காமலும் ஜனநாயக ரீதியான போராட்டங்களை நடத்தலாம் என்று நீதிமன்றம் அனுமதியளித்துள்ளது.

அதன் பிரகாரம் நீதிமன்றத் தீர்ப்புக்குக் கட்டுப்பட்ட வகையில் அமைதியான முறையில் போராட்டம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுகின்றது. வியாழக்கிழமை இரவு தொடரும் போராட்டம் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணி வரை தொடரும். பௌத்த பேரிவாத ஆக்கிரமிப்புகளுக்கு எதிராக ஒட்டுமொத்த தமிழினமும் ஒன்றுசேர்ந்து எதிர்ப்பினை வெளிப்படுத்தினாலே இவ்வாறான ஆக்கிரமிப்புக்களை கட்டுப்படுத்தவும் ஆக்கிரமிக்கப்பட்ட காணிகளை விடுவிக்கவும் ஆத்துமிறி கட்டப்பட்ட விகாரையை அப்புறப் படுத்தவும் முடியும்.

இப்போராட்டத்தில் தமிழ்த் தேசிய உணர்வாளர்கள் அனைவரையும் இன்று வெள்ளிக்கிழ்மை காலை 8.30 மணிக்கு தையிட்டி விகாரைக்கு முன்பாக உள்ள தனியார் காணியில் இடம்பெறும் அமைதியான போராட்டத்தில் கலந்து கொண்டு போராட்டத்திற்கு வலுச் சேர்க்குமாறு அன்புடன் அழைக்கின்றோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7,9,33,104)

## பண்ணை...

தொடர்பிலான வழக்கு எதிர்வரும் 16 ஆம்திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

குறித்த வழக்கு நேற்று வியாழக்கிழமை யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் இடம்பெற்றபோதே நீதவானால் மேலதிக கால அவகாசம் வழங்கப்பட்டு இம்மாதம் 16ஆம் திகதிக்கு வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

புதுவருடம் அன்று பண்ணை சுற்றுவட்டத்தில் நாகபூஷணி அம்மன் சிலை பிரதிஷ்டை செய்யப்பட்டமை தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸாரால் குறித்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7,9)


ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 04/05/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1561
வெற்றி இலக்கங்கள்
கன்னி 0 8 5 4 9 4
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2023.05.04
சீட்டிழுப்பு இலக்கம் - 1136
ஆங்கில எழுத்து S
வெற்றி இலக்கங்கள் 31 62 72 79
தொலைபேசி : 011 460 7000 / 011 232 4324
உத்தியோகபூர்வ முடிவுகளுக்கு : 011 466 9416

கொவிசெத
திகதி 2023.05.04
சீட்டிழுப்பு இலக்கம் 3348
ஆங்கில எழுத்து O
வெற்றி இலக்கங்கள் 15 22 53 74
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 04/05/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1454
வெற்றி எழுத்து M
சுப்பர் இலக்க 10
வெற்றி இலக்கங்கள் 03 37 52 56

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.05.04
சீட்டிழுப்பு இலக்கம் 415
வெற்றி இலக்கங்கள் 09 27 34 61
தனுசு
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2023/05/04
சீட்டிழுப்பு இலக்கம் 5106
ஆங்கில எழுத்து U
வெல்லப்பட்ட இலக்கங்கள் 2 6 4 8 3 8
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2080
நிறம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 2023.05.04
தினம் வியாழக்கிழமை
M 05 19 68 76
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,418,380/-
DLB அபிவிருத்தி லொத்தர் சபை
www.dlb.lk

சனிதா
வியாழக்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2023.05.04
வெற்றி வாரம்: 4241
வர்ணம்: சிவப்பு
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 43,737,027.60
வெற்றி இலக்கங்கள் 19 42 64 66
ஆங்கில எழுத்து O
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,197,107.40
திகதி 2023-05-04
வெற்றி வாரம் 3792
வர்ணம் கபிலம்
வெற்றி இலக்கங்கள் 01 05 43 51
மிதுனம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 9,624,640/-

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
B 08 04 11 29 58
சுப்பர் இலக்கம்
1256
2023.05.04
திங்கட்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 327,678,268.20
தொலை பேசி : 011-2 333 546-47
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சம்வர்தன வாசனாவ
அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 591
திகதி 2023-05-04
வர்ணம் நீலம்
ஆங்கில எழுத்து O
வெற்றி இலக்கங்கள் 28 49 54
விதி எண் 04
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 19,501,420.00
DEVELOPMENT LOTTERIES
தொ. பே.: 0112 333 548/47
Web: www.dlb.lk

ADA KOTIPATHI
வியாழக்கிழமை
வெற்றி வாரம் : 1906
வர்ணம் : இளம் நீலம்
சீட்டிழுப்பு திகதி : 2023.05.04
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 83,777,318.00/-
வெற்றி இலக்கங்கள் 06 09 12 13
ஆங்கில எழுத்து X


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரங்குகளுக்கு இன்னும் விசா கிடைக்கவில்லை

## ஆளுங்கட்சி கூட்டத்தில் ஜனாதிபதி நகைப்பு

ஆளுங்கட்சி பாராளுமன்றக்குழுக் கூட்டம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில், ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற வேளை சமகால அரசியல் நிலைவரங்களுக்கு அப்பால் 'குரங்கு விவகாரம்' பற்றியும் பேசியுள்ளனர்.

கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர், "இந்த குரங்கு தொல்லை தாங்க முடியவில்லை என்றும் எனது தொகுதியிலும் நிலைமை மோசமாக உள்ளதால் அவற்றை சீனாவுக்கு அனுப்பும் முடிவை நிறுத்தக் கூடாது என்று கூறியுள்ளதுடன் இந்த விடயம் தொடர்பில் அரசின் நிலைப்பாடு என்னவென்று" வினா எழுப்பியுள்ளார்.

அதற்கு ஜனாதிபதி, குரங்குகளுக்கு இன்னும் விசா கிடைக்கவில்லை என நகைப்புடன் பதிலளித்துள்ளார்.

அப்பொழுது பாராளுமன்ற உறுப்பினர் ஜயந்த வீரசிங்க, குரங்குகளை சீனாவுக்கு அனுப்ப கூடாது எனவும் குரங்குகளின் மூளையை அவர்கள் உண்ணுவதாகவும் தானும் வீட்டில் 20 வருடங்களாக குரங்கு வளர்த்தவன் என்பதுடன் அவற்றால் அவ்வளவு பாதிப்பில்லை என்றும் கூறியுள்ளார்.

அவரின் இந்த கருத்தையடுத்து கூட்டத்தில் சிரிப்பொலி மேலோங்கியதுடன், அப்படியானால் குரங்குகளை உங்கள் வீட்டில் விடலாம், அதுமட்டுமல்ல உங்களுக்கு குரங்குத்துறை அமைச்சையும் வழங்கலாம் என்றும் ஆளுங்கட்சி உறுப்பினர்கள் குறிப்பிட்டுள்ளனர். (ம-7.9)


**IELTS - New Batch ஆரம்பம்**

Sp.Offer 10% Discount
உடன் Basic & Advance
Grammar Classes, First Class
(Free of Charge)
இல. 53, சிவகுருநாதர் வீதி,
Brown Rd, Jaffna.
077 798 9830 By:- B.MURALI (15419)
வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுக்கான Student Visa மற்றும் Work Visa ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்.

**VILLAGE HOTEL**

யாழ் - கொழும்பு பஸ் சேவை
மீண்டும் ஆரம்பம்
AIRPORT PICK UP DROP SERVICE
அன்னை முத்துமாரி பேருந்து சேவை இனிவரும் காலங்களில் VILLAGE HOTEL எனும் பெயரில் அதே நிர்வாகத்தின் கீழ் இயங்கும் என்பதை அறியத் தருகின்றோம்



077 544 8503 (15437)

**வேலையாட்கள் தேவை**

மன்னா லங்கா நிறுவனத்திற்கு முதியோர் பராமரிப்புக்கு பெண் பராமரிப்பு உதவியாளர்கள் தேவை.
தங்குமிடம் மற்றும் உணவு வழங்கப்படும்
சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.
தொடர்புகளுக்கு (14064)
077 722 2785
077 722 6297

**வேலையாள் தேவை**

ஈர அரிசி அரைத்து
வறுத்தல்
சம்பளம் :2000/= மேல் (C-6485)
077 936 1356

**சுய தொழில் பயிற்சி**

யாழ்ப்பாண கல்லூரி
வெளிவாரி பட்டப்படிப்புக்கள் பிரிவில்
இலத்திரனியல் செயல்முறை றிப்பியறிங்
பயிற்சிநெறி காலம் 1 வருடம்
பயிற்சி முடிவில் டிப்ளோமா சான்றிதழ்
கல்வித்தகைமை : க.பொ.த(சா) தோன்றியுள்ளமை
இடம் : ஆஸ்பத்திரி வீதி கொமோர்ஷல் வங்கிக்கு அருகில்
ஆரம்பம் : 08.05.2023
காலை 10.30 மணி (15460)
077 844 5417
021 222 3382

**கணினி பதிவாளர் தேவை**

எமது நிறுவனத்தில் கணினியில் தரவுகள் பதிவு செய்வதற்கு Microsoft Office படித்த முன் அனுபவம் உடைய பெண் பணியாளர் தேவை.
சுயவிபரக்கோவையுடன், உரிய கல்வி சான்றிதழ் மற்றும் கிராமசேவகரின் சிபார்சு கடிதத்துடன் கிழமை நாள்களில் முற்பகல் 10.00 மணி தொடக்கம் 4.00 மணி வரை நேரில் வரவும். (C-6482)
தொடர்புகளுக்கு : 076 668 8025
சிவா நறுமணப் பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சத்திரசந்திக்கு அருகாமையில்)

**உடனடி வேலை வாய்ப்பு**

நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS
எமது கிளைகள்
• கிளிநொச்சி • சுன்னாகம்
• சாவகச்சேரி • மானிப்பாய்
• நெல்லியடி • பருத்தித்துறை
• திருகோணமலை • வல்வெட்டித்துறை
• கோப்பாய் • புத்தூர்
• பண்டத்தரிப்பு • சங்கானை
• கொழும்பு (C-6484)
வயது -30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

**VISA விண்ணப்பங்கள்**

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்
✓ ONLINE APPLICATIONS
✓ VISA APPOINTMENTS
✓ PASSPORT APPLICATION
✓ POLICE CLEARANCE
என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும். (C-6484)




Srilankan Visa Extension வெளிநாட்டு Passport களுக்கு இலங்கை விசா நீட்டித்து தரப்படும்
COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம்.
V2 TRAVELS
0777-068-777

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் சாவகச்சேரிப் பகுதியில் 04 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
நிலப்பரப்பு
- சாவகச்சேரி மகளிர் கல்லூரி பிரதான வீதியுடன்.
- A9 பிரதான வீதியிலிருந்து 700m தூரம்.
- காய்க்கும் தென்னைகள் 36 உள்ளன.
- 2 பரப்பாக [illegible] பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன் உள்ளது.
- ஒரு பரப்பின் விலை 19 லட்சம் முதல் 17 லட்சம் வரை

பார்வையிடும் நேரம் :
காலை 06 மணி முதல் மாலை 06 மணிவரை
தரகர் தேவையில்லை (15467)
தொடர்புகளுக்கு :- ஜெயம்
077 814 7389, 077 986 5457

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் கைதடி A9 பிரதான வீதியுடன் 05 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
நிலப்பரப்பு
- 18 அடி பாதையுடன் 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் பிரிக்கப்[illegible] நிலையில் உள்ளது.
- நல்ல தண்ணீர் ஊற்று சூழல்
- திருமண மண்டபங்கள் அமைப்பதற்கும் அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.
- ஒரு பரப்பின் விலை 35 இலட்சம்.

பார்வையிடும் நேரம் : காலை 06 மணி தொடக்கம் மாலை 06 மணிவரை (15467)
தொடர்புகளுக்கு :- ஜெயம்
077 814 7389, 077 98[illegible]


**அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு**



மகிழ்வில் 28.11.1951
நெகிழ்வில் 23.04.2023

அன்புடையீர்!

கடந்த 23.04.2023 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

**அமரர் கந்தசாமி ஐயர் உலககுருநாதன் ஐயர்**

அவர்களின் அந்தியேட்டிக் ;கிரியைகள் எதிர்வரும் 07.05.2023 ஞாயிற்றுக் கிழமை அதிகாலை 4.30 மணியளவில் ஆரம்பமாகி தொண்டைமானாறு செல்வச் சந்நிதி தீர்த்தக்கரையில் அஸ்தி கரைக்கப்படும். தொடர்ந்து பகல் 12.00 மணியளவில் மெத்தை வீட்டு கந்தசாமி ஐயர் மடத்தில் சபிண்டீகரண நிகழ்வு நடைபெற்று அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ்வழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கின்றோம்.

செல்வச்சந்நிதி கோவிலடி,
தொண்டைமானாறு. (15465)

இங்ஙனம்:- குடும்பத்தினர்
தொ.பே:- 077 803 7866

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.05.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.